
# தின பூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 217 வைகாசி 02 | TN-TVL/25/2012-2014

நெல்லை, வெள்ளி, மே 16, 2025 | ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00

**சிந்து நதி நீர் ஒப்பந்த விவகாரம்: பேச்சுவார்த்தைக்கு வருமாறு இந்தியாவுக்கு பாக். அழைப்பு**


...2-ம் பக்கம்

**சோபியா குறித்து கருத்து: பா.ஜ.க. அமைச்சருக்கு சுப்ரீம் கோர்ட் கண்டனம்**

...3-ம் பக்கம்

**இந்திய அணியில் தனக்கு முழு அதிகாரம் வேண்டும்: பி.சி.சி.ஐ.யிடம் காம்பீர் கோரிக்கை**

...6-ம் பக்கம்





● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா ராமச்சந்திரன், ஆ.ராசா எம்.பி., கணேஷ் எம்.எல்.ஏ., மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வரும் 25-ம் தேதி வரை 11 நாட்கள் நடைபெறுகிறது:

# 127-வது உதகை மலர் கண்காட்சியை துவக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

ஊட்டி, மே 16-

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் புகழ்பெற்ற 127-வது மலர்கண்காட்சி தொடங்கியது. முதல்வர் மு க ஸ்டாலின் கண்காட்சி தொடங்கி வைத்தார். இக்கண்காட்சி வருகிற 25-ம் தேதி வரை 11 நாட்கள் நடைபெறுகிறது.**

நீலகிரி மாவட்டத்தில் நிலவும் இதமான காலநிலை மற்றும் இயற்கை வளம் மிகுந்த வனப்பகுதிகள் மற்றும் சுற்றுலா தலங்களைக் கண்டு ரசிக்க தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். சுற்றுலா பயணிகளை மேலும் கவரும் விதமாக ஆண்டுதோறும் மே மாதத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது. கோத்தகிரியில் காய்கறி கண்காட்சியுடன் கோடை விழா கடந்த 3-ம் தேதி தொடங்கியது. மேலும் வாசனை திரவிய கண்காட்சி, ரோஜா கண்காட்சியும் நடத்தப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், 127-வது மலர் கண்காட்சி நேற்று தொடங்கி வருகிற 25-ம் தேதி வரை 11 நாட்கள் நடக்கிறது. இந்த ஆண்டு சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், ஜெர்மனியம் சைக்ளோபின் பால்சம், புதிய ரக ஆர்னமென்டல் கேல், ஓரியண்டல் லில்லி, பேன்சி மேரிகோல்டு, ஜினியா, டெல்முனியம் போன்ற 275 வகையான விதைகள், செடிகள் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பெறப்பட்டு, மலர் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில் 7.5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு உள்ளது. இதேபோல் மலர்மாடம் உள்பட பல இடங்களில் 45 ஆயிரம் மலர் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

விழாவின் முக்கிய அம்சமாக பாரம்பரியத்தை நினைவு படுத்தும் வகையில் சோழர் பரம்பரை பெருமை குறித்து விளக்கும் வகையில் ராஜராஜ சோழனின் அரண்மனை உருவம் 2 லட்சம் காரனேசன் உட்பட பல்வேறு மலர்களால் அமைக்கப்பட்டு உள்ளது. இதேபோல் சோழ அரசின் பெருமையை விளக்கும் வகையில் கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணை உருவம் 65 ஆயிரம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 7 லட்சத்துக்கும் அதிகமான மலர்களால் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு கள்ளிச்செடி மாளிகை மற்றும் கண்ணாடி மாளிகை புதுப்பிக்கப்பட்டு அங்கும் அரியவகை தாவரங்கள் மற்றும் மலர் செடிகள் வைக்கப்பட்டுள்ளன.

வழக்கமாக 5 நாட்கள் நடக்கும் மலர் கண்காட்சி இந்த முறை 11 நாட்கள் நடப்பதால் பூந்தொட்டிகள் மற்றும் மலர் செடிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு உள்ளது. பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அரங்கமும், பல்வேறு அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

### மசோதாக்கள் மீது முடிவெடுக்க காலக்கெடு நிர்ணயம்:

# சுப்ரீம் கோர்ட்டிற்கு சவால் விடும் ஜனாதிபதி மற்றும் மத்திய அரசு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்

சென்னை, மே 16-

**மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஜனாதிபதி மற்றும் கவர்னர்களுக்கு காலக்கெடு நிர்ணயிக்க முடியுமா என்று கேள்வியெழுப்பி ஜனாதிபதி திரௌபதி முர்மு சுப்ரீம் கோர்ட்டுக்கு கடிதம் எழுதியுள்ளார். இது சுப்ரீம் கோர்ட்டிற்கு சவால் விடுவதாக உள்ளது என ஜனாதிபதி மற்றும் மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**கடும் கண்டனம்....**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'தமிழக கவர்னர் வழக்கு மற்றும் பிற முன்னுதாரணங்களில் ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் தீர்த்து வைத்த அரசியலமைப்பு நிலைப்பாட்டைத் தகர்க்க முயற்சிக்கும் மத்திய அரசு, ஜனாதிபதியின் கடிதத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மக்களின் ஆணையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் பா.ஜ.க.வின் கட்டளைப்படி தமிழக கவர்னர் செயல்பட்டார் என்பதை இந்த முயற்சி தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

**பலவீனப்படுத்தும்...**

ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை, மத்திய அரசின் முகவர்களாகச் செயல்படும் கவர்னர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதன் மூலம் பலவீனப்படுத்தும் ஒரு தீவிர முயற்சி இது. இது சட்டத்தின் மகத்துவத்தையும் அரசியலமைப்பின் இறுதி விளக்கவுரையாளரான சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரத்தையும் நேரடியாக இக்கடிதம் சவால் செய்கிறது.

**முதல்வர் கேள்வி...**

கவர்னர்கள் செயல்படுவதற்கான காலக்கெடுவை நிர்ணயிப்பதில் ஏன் எந்த

(கடைசி பக்கம் பார்க்க)

**"கவர்னர்கள் செயல்படுவதற்கான காலக்கெடுவை நிர்ணயிப்பதில் ஏன் எந்த ஆட்சேபனையும் இருக்க வேண்டும்? மசோதா ஒப்புதலில் காலவரையற்ற தாமதங்களை அனுமதிப்பதன் மூலம் பா.ஜ.க. தனது கவர்னர்களின் தடையை சட்டப்பூர்வமாக்க முயற்சிக்கிறதா? பா.ஜ.க. அல்லாத மாநில சட்டமன்றங்களை முடக்க மத்திய அரசு விரும்புகிறதா?"**

**-முதல்வர் மு.க.ஸ்டாலின்**



### மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க காலம் நிர்ணயிக்க முடியுமா?

# சுப்ரீம் கோர்ட்டிடம் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி முர்மு

புது தில்லி, மே 16-

**தமிழ்நாடு கவர்னர் விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டிடம் ஜனாதிபதி திரௌபதி முர்மு விளக்கம் கேட்டுள்ளார். மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க அரசியல் சாசனத்தில் கால நிர்ணயம் இல்லாதபோது சுப்ரீம் கோர்ட் நிர்ணயிக்க முடியுமா? என்பது உள்பட 14 கேள்விகள் இதில் இடம்பெற்றுள்ளது.**

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக கவர்னருக்கு மீண்டும் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வருவதாகவும் தமிழகத்தின் மூன்று பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்களின் நியமன விவகாரத்தில் கவர்னரின் தலையீடு அதிகரிப்பதாகவும் கூறி தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகளைத் தொடர்ந்தது.

வழக்குகளை விசாரித்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பர்திவாலா, மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, மாநில மசோதாக்கள் குறித்து முடிவெடுப்பதற்கு கவர்னர் மற்றும் ஜனாதிபதிக்கு காலக்கெடு விதித்து ஏப்ரல் 8 ஆம் தேதி தீர்ப்பளித்தது. மேலும், இந்தத் தனிப்பட்ட வழக்குடன், சட்டப்பிரிவு 200-ன் கீழ் கவர்னருக்கு அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க எடுத்துக்கொள்ளப்படும் கால அவகாசம் குறித்தும், காலக்கெடுவுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் அதற்கான சரியான காரணங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மாநில அரசிற்கு தெரிவிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் கூறியது. அரசியலமைப்பின் 201-வது பிரிவின் கீழ், ஜனாதிபதியின் முடிவுக்கு எந்த காலக்கெடுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

இந்த நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில், சுப்ரீம் கோர்ட்டிடம் ஆலோசனை கேட்கும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 143-ன் கீழ் மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க அரசியல் சாசனத்தில் கால நிர்ணயம் இல்லாதபோது சுப்ரீம் கோர்ட்டால் நிர்ணயிக்க முடியுமா? என்பது உள்பட 14 கேள்விகளுக்கு ஜனாதிபதி கூடுதல் விளக்கம் கேட்டுள்ளார்.

அவர் எழுப்பிய கேள்விகளின் விவரம் வருமாறு:-

1. பிரிவு 200-இன் கீழ் ஒரு மசோதா கவர்னருக்கு அனுப்பி வைக்கப்படும்போது, அவருக்கு முன் உள்ள அரசியலமைப்பு விருப்பங்கள் என்னென்ன?

2. ஒரு மசோதா கவர்னருக்கு அனுப்பி வைக்கப்படும்போது, அவருக்கு இருக்கும் அரசியலமைப்பு விருப்பங்களையும் செயல்படுத்தும்போது, அமைச்சரவை வழங்கும் ஆலோசனைக்கு கவர்னர் கட்டுப்பட்டவரா?

3. பிரிவு 200-இன் கீழ் கவர்னரின் அரசியலமைப்பு விருப்புரிமை நீதித்துறை மறுஆய்வுக்கு உட்பட்டதா?

4. பிரிவு 200-இன் கீழ்

(கடைசி பக்கம் பார்க்க)

### வக்பு சட்டத்திற்கு எதிரான வழக்கு: சுப்ரீம் கோர்ட்டில்

# மே 20-ல் நாள் முழுவதும் விசாரணை

புதுடெல்லி, மே 16-

**வக்பு சட்டத் திருத்தங்களுக்கான இடைக்காலத் தடை குறித்த வாதங்களைக் கேட்க தலைமை நீதிபதி கவாய் தலைமையிலான அமர்வு மே 20-ம் தேதி முழுவதையும் ஒதுக்கியுள்ளது.**

வக்பு திருத்தச் சட்டத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் உள்ள வாதங்களைக் கேட்க, தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் ஆகியோர் அடங்கிய சுப்ரீம் கோர்ட் அமர்வு, மே 20-ம் தேதி ஒரு முழு நாளையும் ஒதுக்க முடிவு செய்துள்ளது.

வழக்கு ஒத்திவைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய, வழக்கறிஞர்கள் தங்கள் ஆவணங்கள் மற்றும் சட்டப் புள்ளி விவரங்களை முன்கூட்டியே சமர்ப்பிக்கத் தயாராக வருமாறு தலைமை நீதிபதி கவாய் கேட்டுக் கொண்டார். சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கவாய், "செவ்வாய்கிழமை (மே 20, 2025) வேறு எந்த விஷயத்தையும் நாங்கள் எடுத்துக் கொள்ள மாட்டோம்." என்று வழக்கறிஞர்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக, நேற்று முன்தினம் சுப்ரீம் கோர்ட்தலைமை நீதிபதி கவாய் பதவியேற்ற நிலையில், வக்பு சட்டம் குறித்த வழக்கு முதல் முறையாக அவரது அமர்வு முன்வந்தது. அப்போது, அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவும், மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர் கபில் சிபலும், விசாரணையின் தொடக்கத்தில் வழக்கை அடுத்த வாரத்துக்கு திட்டமிடவும், வழக்கு ஆவணங்களை ஆய்வு செய்ய அமர்வுக்கு போதுமான நேரம் வழங்கவும் பரிந்துரைத்தனர்.

இந்த வழக்கு கடைசியாக மே 5 அன்று தலைமை நீதிபதி கவாய்க்கு முந்தைய தலைமை நீதிபதியான சஞ்சீவ் கன்னா தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட சிறப்பு அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி கன்னா வழக்கை தொடர்ந்து விசாரிக்க தயக்கம் தெரிவித்தார். அவர், மே 13 அன்று ஓய்வு பெறும் வரை தனக்கு மிகக் குறைந்த நேரமே உள்ளது என்று கூறி வழக்கை மே 15-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். இந்த வழக்கை மே 5-ம் தேதிக்கு முன்னர், நீதிபதிகள் கன்னா, சஞ்சய் குமார் மற்றும் கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.




**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 1,200.18 | 395.20 |
| பாயின்ட் 82,530.74 | பாயின்ட் 25,062.10 |



**தங்கம்**
1 சவரன் ₹68,880
1 கிராம் ₹8,610



**வெள்ளி**
1 கிலோ ₹108,000
1 கிராம் ₹108.00

**டாலர்** ₹85.43

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### சிந்து நதி நீர் ஒப்பந்தம்:
# பேச்சுவார்த்தைக்கு வருமாறு இந்தியாவுக்கு பாக். அழைப்பு

**புதுடெல்லி, மே 16-**

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா நிறுத்தி வைத்துள்ள சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ம் தேதி லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 அப்பாவி சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இதையடுத்து ஏப்ரல் 23-ம் தேதி பிரதமர் மோடி தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 1960-ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுகிறது என்பது உட்பட 5 முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.



பாகிஸ்தானின் குடிநீர் தேவையில் 70 சதவீதத்துக்கும் மேல் பூர்த்தி செய்யக்கூடியது என்பதால், சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு அந்நாட்டுக்கு மிகப் பெரிய இடியாக அமைந்தது. தொடர்ந்து இரு நாட்டு ராணுவங்களுக்கு இடையே 4 நாட்கள் நடந்த மோதலில், பாகிஸ்தான் ராணுவம் கடும் இழப்புகளைச் சந்தித்தது. இதையடுத்து, மே 10ம் தேதி பாகிஸ்தான் டி.ஜி.எம்.ஓ., இந்திய டி.ஜி.எம்.ஓ.வை தொடர்பு கொண்டு ராணுவ நடவடிக்கையை நிறுத்திக் கொள்ள வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, மோதல் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தானின் நீர்வள அமைச்சக செயலாளர் சையத் அலி முர்தாசா, இந்தியாவின் நீர்வள செயலாளர் தேபாஸ்ரீ முகர்ஜிக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்த கடிதம் ஒரு வாரத்திற்கு முன்பு வந்துள்ளது. அதில், சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் எனவே, பாகிஸ்தானின் சிந்து நதி ஆணையருடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய பிரதிநிதிகளை இந்தியா பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் பெயர் வெளியிட விரும்பாத அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் அக்கடிதங்களில், சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்ததற்கும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறுவதற்கும் பாகிஸ்தான் ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

### நீண்ட நாட்களுக்கு பின்னர்
# ஒரு சவரன் தங்கம் விலை ரூ. 69,000-க்கும் கீழ் சரிவு

**சென்னை, மே 16-**

சென்னையில் நேற்று (மே 15) 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.195 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,610-க்கும், பவுனுக்கு ரூ.1,560 குறைந்து, ஒரு பவுன் ரூ.68,660-க்கும் விற்பனையானது. நீண்ட காலத்துக்குப் பின்னர் பவுன் ரூ.69,000-க்கும் கீழ் குறைந்துள்ளது. இது நகை வாங்குவோர் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஏப்.22-ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.74,320 ஆக உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டது. அதன்பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வருகிறது.

அந்த வகையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை மே 13-ம் தேதி காலை, மாலை என அடுத்தடுத்து 2 முறை உயர்ந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியது. காலையில் பவுனுக்கு ரூ.120, மாலையில் ரூ.720 என மொத்தமாக, பவுனுக்கு ரூ.840 உயர்ந்து ரூ.70,840-க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.105 உயர்ந்து, 8,855-க்கு விற்பனையானது.

தொடர்ந்து நேற்று முன்தினம் (மே 14) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து 8,805 ஆகவும், பவுனுக்கு ரூ.400 குறைந்து ரூ.70,440 ஆக விற்பனையானது. இந்நிலையில் நேற்று (மே 15) 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.195 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,610-க்கும், பவுனுக்கு ரூ.1,560 குறைந்து, ஒரு பவுன் ரூ.68,660-க்கும் விற்பனையானது. நீண்ட காலத்துக்குப் பின்னர் பவுன் ரூ.69,000-க்கும் கீழ் குறைந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.1 குறைந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.108-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,08,000-க்கும் விற்பனையானது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, 24 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரணி இல்லத்தை திறந்து வைத்தார்.

### நியூசிலாந்து நாடாளுமன்றத்தில்
# 3 பழங்குடியின எம்.பி.க்கள் சஸ்பெண்ட்

**வெல்லிங்டன், மே 16-**

நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் பழங்குடியின எம்பிக்கள் 3 பேரை இடைநீக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் கடந்த 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் கொண்டு வரப்பட்ட மவோரி பழங்குடியின மக்களுக்கு எதிரான சட்டத்திருத்த மசோதாவின் நகலை கிழித்து, இளம் மவோரி எம்பி ஹனா ராவ்ஹிதி கரேரிகி மைபி கிளார்க் (வயது 22), பாரம்பரிய ஹக்கா முழக்கத்தை எழுப்பி தனது எதிர்ப்பைக் காட்டினார். அப்போது, அவருடன் மற்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு முழக்கம் எழுப்பினர். இந்தச் சம்பவம் முழுவதும் பதிவு செய்யப்பட்ட விடியோ இணையத்தில் மிகவும் வைரலாகி, பலரும் ஹனாவுக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்து வந்தனர்.



இந்நிலையில், நியூசிலாந்து அரசு அமைத்த ஆணையம் நாடாளுமன்றத்தில் ஹக்கா முழக்கம் எழுப்பிய மூன்று உறுப்பினர்களையும் தற்காலிகமாக இடைநீக்கம் செய்ய பரிந்துரைத்துள்ளது. அதில், தெ பாதி மவோரி எனும் மவோரி பழங்குடியின கட்சியின் துணைத் தலைவர்களான டெப்பி ஙாரெவா பாக்கேர் மற்றும் ராவிரி வைட்டிட்டி ஆகியோரை 21 நாள்களுக்கும் இளம் உறுப்பினர் ஹனாவை 7 நாள்களுக்கும் இடைநீக்கம் செய்ய பரிந்துரைக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### பொள்ளாச்சி பாலியல் வழக்கின் தீர்ப்பு:
# யாரும் உரிமை கோருவது நியாயம் அல்ல: வி.சி.க. தலைவர் திருமாவளவன் கருத்து

**கோவை, மே 16-**

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கோவை மண்டல சிறப்பு செயற்குழு கூட்டம் கோவை நவஇந்தியா எஸ்.என்.ஆர். அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. கலந்து கொண்டு பேசினார். முன்னதாக அவர் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கு தமிழ்நாட்டிற்கு களங்கத்தை ஏற்படுத்திய செயல். இதுபோன்ற கூட்டு பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் இனி தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் எங்கும் நடக்கக்கூடாது என்ற அளவிற்கு இந்த தீர்ப்பு அமைந்துள்ளது. இந்த தீர்ப்பை வழங்கிய நீதிபதிக்கு எனது பாராட்டுகள். இந்த வழக்கில் குற்றவாளிகள் தப்பித்து விடுவார்களோ என்ற அச்சம் இருந்தது ஆனால் அரசு தரப்பில் உறுதியாக நின்று வக்கீல்கள் வாதாடி இருக்கிறார்கள். அவர்களையும் பாராட்டுகிறேன். இது பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மட்டுமன்றி மனிதநேயம் உள்ள அனைவருக்கும் ஒரு கொடுங்காயத்திற்கு இடைப்பட்ட மாமருந்தாகவே அமைந்து இருக்கிறது.

இந்த வழக்கின் தீர்ப்புக்கு தி.மு.க., அ.தி.மு.க., வி.சி.க என யாரும் உரிமை கோருவதில் நியாயம் இல்லை. சான்றுகள் வலுவாக இருந்தது. குறிப்பாக செல்போன்கள் மற்றும் சமூக வலைதளங்கள் பதிவு செய்த தடயங்கள் இந்த தண்டனைக்கு ஆதாரங்களாக இருந்தது. அதனால் அவர்களால் தப்பிக்க இயலவில்லை. யார் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### பொள்ளாச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட
# பெண்களுக்கு கூடுதல் நிவாரண நிதி: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, மே 16-**

பொள்ளாச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கூடுதலாக தலா ரூ.25 லட்சம் நிவாரணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பொள்ளாச்சியில் கடந்த 2019-ம் ஆண்டு ஒரு கல்லூரி மாணவி மற்றும் பெண்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து ஆபாச வீடியோ எடுத்து துன்புறுத்தப்பட்டனர். இந்த வழக்கில் சி.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி விசாரணை மேற்கொண்டு திருநாவுக்கரசு (வயது 25), சபரிராஜன் (25), சதீஷ் (28), வசந்தகுமார் (27), மணிவண்ணன் (28), ஹெரன்பால் (29), பாபு (27), அருளானந்தம் (34) மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேரை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி நந்தினி தேவி தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ரூ.10 லட்சம், ரூ.15 லட்சம் என வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை குற்றச்செயலில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதிமன்றம் மொத்தமாக ரூ.85 லட்சம் வழங்க உத்தரவிட்ட நிலையில் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 லட்சம் கூடுதலாக வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்வழக்கில் கோயம்புத்தார் மகளிர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தவழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள் தைரியமாக முன்வந்து புகார் அளித்தது மட்டுமல்லாமல் நீதிமன்ற விசாரணைக் குழு ஒத்துழைப்பும் அளித்ததன் அடிப்படையிலேயே இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைத்துள்ளது. அத்தகைய நியாயத்திற்காக துணிச்சலுடன் போராடிய பெண்களின் தைரியம் பாராட்டுக்குரியது. அந்த வகையில், நீதிமன்றம் உத்தரவிட்ட மொத்த நிவாரணத் தொகையாகிய ரூ.85 லட்சத்திற்கும் கூடுதலாக பாதிக்கப்பட்ட பெண்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 லட்சம் என நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

### மெக்சிகோவில் பயங்கரம்:
# டிக்டாக் நேரலையில் மாடல் அழகி சுட்டுக்கொலை

**ஜலிஸ்கோ, மே 16-**


மெக்சிகோவில் டிக்டாக் நேரலையின் போது மாடல் அழகி ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜலிஸ்கோ மாநிலத்தில் உள்ள ஜபோபான் எனும் பகுதியில் பியூட்டி சலூனில் பணியாற்றி வந்தவர் வலேரியா மார்க்வெஸ். 23 வயதான இவர், டிக் டாக் மற்றும் இன்ஸ்டாகிராமில் 2 லட்சம் பாலோவர்ஸ்களுடன், சமூக வலைதளத்தில் மிகவும் பிரபலமானவராக திகழ்ந்து வந்துள்ளார். தான் செய்யும் மேக்கப் பணி குறித்த வீடியோக்களை சமூகவலைதளங்களில் பதிவிட்டு வந்துள்ளார். அவ்வப்போது, நேரலையில் தனது பாலோயர்களுடனும் பேசுவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளார்.



இந்த நிலையில், வலேரியா மார்க்வெஸ் தான் பணியாற்றும் சலூனில் இருந்து, டிக்டாக் நேரலை செய்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த மர்ம நபர், வலேரியாவை சரமாரியாக சுட்டுக் கொன்றுள்ளார். இது டிக்டாக் நேரலையில் அப்படியே ஒளிபரப்பானது. இதனைக் கண்ட அவரது பாலோவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, அவரது செல்போனை எடுத்த நபர், தனது முகத்தை நேரலையில் காட்டியுள்ளார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், அந்த நபர் குறித்து விசாரித்து வருகின்றனர்.

**16-05-2025**





**மேஷம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள். நல்ல மனைவி அமைவாள். புனிதப் பயணங்கள் ஏற்பட்டு புண்ணியம் சேரும்.

**ரிஷபம்:-** மனைவி/கணவனின் மனம் அறிந்து செயல்பட்டால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். எந்தச் செயலையும் அவசரமின்றி நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம்.

**மிதுனம்:-** வாக்கு சாதுரியத்தால் வருமானம் பெருகும். அரசால் ஆதாயம் உண்டு. புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கடகம்:-** விரும்பிய காரியங்கள் விரும்பியபடி நடக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பயணம் சுகப்படும்.

**சிம்மம்:-** முனைப்புக் காட்டும் முயற்சிகள் வெற்றி பெறும். தொழில் ஆர்வம் கூடினால் தான் ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். சிலருக்கு தேவையற்ற கவலைகள் எழும்.

**கன்னி:-** பெற்றோர்களின் மூலம் சகாயம் அடைவீர்கள். மண வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**துலாம்:-** வியாபாரத்தில் ஏற்பட்ட அதிக வருமானத்தால் பொருளாதாரம் மேம்படும். கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. இனிய பேச்சால் பெண்களை கவர்வர்.

**விருச்சிகம்:-** இன்று, உணவு விஷயத்தில் கூட திருப்தி இருக்காது. மனதில் நிம்மதி அற்ற நிலை உருவாகும். கல்வியில் வெற்றி கிட்டாத நிலையில் மகிழ்ச்சி குறையும்.

**தனுசு:-** மணவாழ்க்கை மணக்கும். தனவரவு மன திருப்தி தரும். ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**மகரம்:-** இடமாற்றம் ஏற்படலாம். நஷ்டங்களை தவிர்க்க வியாபாரத்தில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எதிலும் ஆராய்ந்து செயல்களில் இறங்க வேண்டிய நாள்.

**கும்பம்:-** பெண்களால் தன லாபம் அடைவீர்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவது உறுதி. மாணவர்களுக்கு கல்வியில், வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**மீனம்:-** வியாபார விரிவாக்கத் திட்டங்கள் முன்னேற்றம் தரும். அதன் காரணமாக தன வரவு கூடும். எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.


# அம்மா கைகாட்டவில்லை என்றால் அமைச்சர் ரகுபதி எங்கு இருந்திருப்பார்?
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கேள்வி

**மதுரை, மே 16-**

அம்மா கைகாட்டவில்லை என்றால், அ.தி.மு.க. தொண்டர்கள் வியர்வையும், ரத்தமும் சிந்தி உழைக்கவில்லை என்றால், அமைச்சர் ரகுபதி எங்கு இருந்திருப்பார் என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. அறிக்கைவெளியிட்டுள்ளார்.

இது குறித்து மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும்,முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழ் நாட்டில் என்ன நடக்கிறது என்பதே கொஞ்சம் கூட தெரியாமல், கடந்த 4 ஆண்டுகள் ரகுபதி, முட்டுக்கொடுத்து கொடுத்து அ.தி.மு.க. தொண்டர்களிடம் வாங்கிய தர்ம அடிகளுக்கெல்லாம் பரிசாக இப்போதுதான் கனிமவளக் கொள்ளையடிக்க லைசன்ஸ் கொடுக்கும் விதமாக, அமைச்சர் இலாகா கொடுத்துள்ளார் முதல்அமைச்சர். அந்த உற்சாகத்தில் பலத்த முட்டுகளுடன் நேற்று முன்தினம், ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். யார் இந்த ரகுபதி? அம்மா கைகாட்டவில்லை என்றால், அ.தி.மு.க. தொண்டர்கள் வியர்வையும், ரத்தமும் சிந்தி உழைக்க வில்லை என்றால், இவர் எங்கு இருந்திருப்பார்? இவருக்கு அரசியல் வாழ்வளித்த அ.தி.மு.க. தொண்டர்களின் உழைப்பை உறிஞ்சி, உண்ட வீட்டுக்கே ரெண்டகம் செய்யும் ஒட்டுண்ணியை தானே இந்த ரகுபதி?. பொள்ளாச்சி பாலியல் வழக்கில், நடுநிலையான விசாரணை வேண்டும் என்று வழக்கை சி.பி.ஐ.-க்கு மாற்றி உத்தரவிட்டார்.அன்றைய தமிழ் நாடு முதல்- அமைச்சர் எடப்பாடி பழனிசாமி. தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற. அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கில்



ஞானசேகரனுக்கும் தி.மு.க.-வுக்கும் சம்மந்தமே பச்சைப் பொய் பேசியவர் இந்த ரகுபதி? இந்த ரகுபதியின் பொய்யால் சட்டப் பேரவையில் முதல்வர் ஸ்டாலினே, ஞானசேகரன் தி.மு.க. பொறுப்பாளர் அல்ல. அனுதாபி என உருட்ட வேண்டிய நிலைக்குத் தானே தள்ளப்பட்டார்.

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கில் எப்.ஐ.ஆர். லீக் ஆனதற்கு, பாதிக்கப்பட்டபெண்ணுக்கு 25 லட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்கச் சொல்லி சென்னை உயர்நீதிமன்றம் இந்த அரசின் நடவடிக்கைகளை காரித் துப்பியதே. இதெல்லாம் மறந்துபோச்சா ரகுபதி? உங்கள் முதல்-அமைச்சரை போன்றே, உங்களுக்கும் ஞாபக மறதியா?. கோடநாடு வழக்கில் குற்றவாளிகளைக் கைது செய்து, சாரிஜ்சீட்டோட்டது அ.தி.மு.க. அரசு. கேரளா குற்றவாளிகளுக்கு வாதாடி ஜாமீன்தாரராக இருந்தது தி.மு.க.வினர். கோடநாடு வழக்கை விரைவில் முடியுங்கள் என்று தானே. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சொல்லி இருக்கிறார்? நான்கு ஆண்டுகளாக கோடநாடு வழக்கை விசாரித்து முடிக்க வக்கில்லாத ரகுபதிக்கு இது ஏன் புரியவில்லை?.எடப்பாடி பழனிச்சாமி மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்துப் பேசியதும் வந்துவிட்டது என்ற கடுப்பு இருக்கத் தானே செய்யும்?

அ.தி.மு.க.வால் அரசியல் அடையாளம் பெற்று, அ.தி.மு.க.வில் கொள்ளையடிப்பவர்களுக்கு இட மில்லை என்று தெரிந்ததும், தி.மு.க.வுக்குச் சென்று கொள்ளையிலே குளியல் போட்ட ரகுபதி உள்ளிட்ட ஊழல் பெருச்சாளிகள் வேண்டுமானால் ரெய்டுக்கெல்லாம் பயப்படலாம். மக்களோடு மக்களாக நின்று, மக்களுக்கான அரசி யலைச் செய்யும், எடப்பாடி பழனிசாமி மடியில் கனமில்லை. வழியில் பயமில்லை. நாங்கள் யாரும் ஒரு போதும் எந்த ரெய்டுக்கும் அஞ்சியதில்லை, அஞ்சப் போவதும் இல்லை.

1991-ல் சட்டமன்ற உறுப்பினரானபோது ரகுபதியின் சொத்து மதிப்பு என்ன? அதே ரகுபதியின் இன்றைய சொத்து மதிப்பு என்ன? எத்தனை கல்லூரிகள் வைத்துள்ளார்? பினாமி பெயர்களில் எத்தனை கல்லூரிகள் வைத்துள்ளார்? இப்படி எண்ணிலடங்கா சொத்துக்களை வாரிக் குவித்த ரகுபதி தான், நாளை காலை ரெய்டு வந்துவிடுமோ? என்ற பயத்திலேயே தினந்தோறும் இரவுகளைக் கழிக்கவேண்டும். அறிவாலயத்தில், மேலே ரெய்டுக்கு பயந்து, கீழே கட்சியை காங்கிரசுக்கு அடமானம் வைத்த கொத்தடிமைகள், மாநில உரிமைகள் பற்றி பாடமெடுக்க துளியும் தகுதியற்றவர்கள். இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சுவீடனுக்கான இந்திய தூதர் நியமனம்

**புதுடெல்லி, மே 16-**

சுவீடன் நாட்டுக்கான இந்திய தூதராக அனுராக் பூஷண் நியமனம் செய்யப்பட்டார்.

சுவீடன் நாட்டுக்கான அடுத்த இந்திய தூதராக அனுராக் பூஷணை நியமனம் செய்து மத்திய வெளிவிவகார அமைச்சகம் அறிவித்து உள்ளது. இதுபற்றி அந்த அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், இந்திய வெளியுறவு துறை அதிகாரியாக 1995-ம் ஆண்டு பணியில் சேர்ந்த பூஷண், அமைச்சகத்தில் கூடுதல் செயலாளராக தற்போது பணியில் இருந்து வருகிறார்.



அவர் சுவீடன் நாட்டின் இந்தியாவுக்கான அடுத்த தூதராக நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இந்த பதவியை விரைவில் அவர் ஏற்று கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதுபற்றி சுவீடனில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட செய்தியில், இரு நாடுகளும் நீண்டகால நெருங்கிய உறவுகளை கொண்டுள்ளன. பொது மதிப்புகள், வலிமையான வர்த்தகம், முதலீடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு தொடர்புகளை அவை கொண்டுள்ளதுடன், அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகிய உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் ஒரே வகையான அணுகுமுறைகளை கொண்டுள்ளன என்று தெரிவித்து உள்ளது.

# மியான்மரில் அடுத்தடுத்து நிலநடுக்கம்

**நேபிடாவ், மே 16-**

மியான்மரில் ஒரே நாளில் அடுத்தடுத்து மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

மியாமர் நாட்டில் கடந்த மார்ச் மாதம் 28-ம் தேதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவான நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 3 ஆயிரத்து 645 பேர் உயிரிழந்தனர். மேலும், 5 ஆயிரத்து 17 பேர் படுகாயமடைந்தனர். இந்த நிலையில் மியான்மரில் தற்போது அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. மதியம் 1.31 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.3 ஆக பதிவானதாக தேசிய மையம் தெரிவித்துள்ளது.

### உதகையில் ருசிகரம்:

# மலர்க் கண்காட்சியில் உதயசூரியனுக்கு ஓட்டு கேட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்



**உதகை, மே 16-**

உதகை மலர்க் கண்காட்சியில் மலர் சிம்மாசனத்தில் அமர்ந்த முதல்வர் மு.க. ஸ்டாலின், 'உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்க' என்று கூறி புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 127 ஆவது மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின், மலர் அலங்காரங்களை பார்வையிட்டார். பின்னர் சுமார் 15 ஆயிரம் ரோஜா மலர்களால் வடிவமைக்கப் பட்டிருந்த சிம்மாசனத்தில் அமர்ந்து தனது மனைவி துர்காவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மு.பெ. சாமிநாதன், நீலகிரி எம்.பி. ஆ. ராசா உள்ளிட்டோருடனும் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.


முதலில் தனது மனைவி துர்காவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட முதல்வர், கீழே நின்று கொண்டிருந்த தனது அண்ணன் மு.க. தமிழரசுவின் மகள் பூங்குழலியையும் வரவழைத்து அருகில் அமர வைத்துக் கொண்டார்.

முன்னதாக கையை அசைக்கும்படி புகைப்படக் கலைஞர்கள் கேட்டுக் கொண்டனர். எந்த மாதிரி அசைக்க வேண்டும் எனக் கேட்ட அவர், உத்தரவிடுவதைப் போல காட்டட்டுமா? அல்லது (உதயசூரியன் சின்னத்தைக் காட்டி) இப்படிக் காட்டலாமா? என்று கேட்டார்.

பின்னர் உதயசூரியன் சின்னத்தைக் காட்டியபடி உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

இதைத் தொடர்ந்து பூங்காவில் வைக்கப்பட்டிருந்த மலர் உருவங்களைப் பார்வையிட்ட முதல்வர், தாவரவியல் பூங்கா வளாகத்தில் ரூ. 24.60 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பெரணியகத்தை திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

# சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்லும் முதல் இந்தியர் சுபான்ஷு..!



**புதுடில்லி, மே 16-**

விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு முதல் முறையாக சுபான்ஷு சுக்லா என்ற இந்தியர் ஒருவர் செல்கிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆக்ஸியோம் ஸ்பேஸ் என்ற நிறுவனம் மேற்கொள்ளும் இந்த முயற்சியில் இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா (வயது 39) சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பயணம் மேற்கொள்கிறார். இதன்மூலம், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு முதல் முறையாக இந்தியர் ஒருவர் செல்வதாகக் கூறப்படுகிறது. இந்தப் புதிய முயற்சிக்கு, மிஷன் - 4 (ஏஎக்ஸ் - 4) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ப்ளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி ஸ்பேஸ் சென்டரிலிருந்து விண்வெளி செல்லும் விண்கலன் மூலம் வரும் மே 29 ஆம் தேதியன்று இந்த முயற்சி மேற்கொள்ளப் படத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சில முக்கிய காரணங்களால் ஜூன் 8 ஆம் தேதிக்கு இந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் பணிக்கு ஷுக்லா, மிஷன் பைலட் ஆக செயல்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவருடன், அமெரிக்காவைச் சேர்ந்த கமாண்டர் பெக்கி விட்சன், போலாந்தைச் சேர்ந்த ஸ்லாவொஸ் உஸ்னான்ஸ்கி விஸ்னியூஸ்கி மற்றும் ஹங்கேரியின் திபோர் காபு ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் செல்கின்றனர்.

முன்னதாக, இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா, நாசா மற்றும் இஸ்ரோ இடையிலான கூட்டு நடவடிக்கைகளின் அடிப்படையில் ஏஎக்ஸ் - 4 மிஷனுக்கு கடந்த ஜனவரி மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பயணத்தின் மூலம், இந்தக் குழுவினர் விண்வெளியில் சில முக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

**மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி**

# யு.பி.எஸ்.சி. புதிய தலைவராக அஜய் குமார் பதவியேற்றார்



**புதுடில்லி, மே 16-**

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யு.பி.எஸ்.சி) புதிய தலைவராக முன்னாள் பாதுகாப்பு செயலாளரும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான அஜய் குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யு.பி.எஸ். ஆணையத்தின் மூத்த உறுப்பினரான ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் ராஜ் சுக்லா, பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார். யு.பி.எஸ்.சி. தலைவராக இருந்த பிரீத்தி சுதனின் பதவிக்காலம் கடந்த ஏப்ரல் 29-ஆம் தேதி நிறைவடைந்ததைத் தொடர்ந்து யு.பி.எஸ்.சி. தலைவர் பதவி காலியாக இருந்தது. யு.பி.எஸ்.சி. தலைவர் பதவிக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியதை டுத்து, அஜய் குமார் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த 1985-ஆம் ஆண்டின் கேரளா பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான அஜய் குமார், கடந்த 2019 முதல் 2022 வரை பாதுகாப்புத் துறை செயலராக பொறுப்பு வகித்தவர். ஆத்ம நிர்பர் பாரத், ஆயுதப்படை நவீனமயமாக்கல் போன்ற முக்கிய திட்டங்களில் பங்காற்றியவர். மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் கேரள அரசின் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். 35 ஆண்டுகளுக்கும் மேலாக கேரளத்திலும், மத்தியிலும் முக்கியப் பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

# சீமானுக்கு எதிரான வழக்கு விசாரணை தள்ளிவைப்பு

**திருச்சி, மே 16-**

சீமானுக்கு எதிரான வழக்கு விசாரணை கல அவகாசம் கேட்டதால் தள்ளி வைக்கப்பட்டது.

திருச்சி சரக டி.ஐ.ஜி.யாக இருப்பவர் வருண்குமார். இவர் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் அக்கட்சியை சேர்ந்தவர்கள் தன்னையும் தனது குடும்பத்தையும் சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பியதாக திருச்சி ஜூடிசியல் மாஜிஸ்திரேட் நான்காவது கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது டி.ஐ.ஜி. கோர்ட்டில் ஆஜரானார். சீமான் ஆஜராக வில்லை.

பின்னர் டி.ஐ.ஜி தரப்பு வழக்கறிஞர் முரளி கிருஷ்ணன், ஏற்கனவே டி.ஐ.ஜி. கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலான விளக்கத்தை மாஜிஸ்ட்ரேட்டிடம் நேரில் அளித்தார். நேற்று சீமான் தரப்பு வழக்கறிஞர் அவரது தரப்பு விளக்கத்தை தெரிவிக்க மீண்டும் கால அவகாசம் கேட்டார். அப்போது நீதிபதி வருகிற 21-ம் தேதி அடுத்த விசாரணை நடைபெறும். அன்று சீமான் தரப்பு விளக்கத்தை அளிக்க வேண்டும் என கூறினார். அதைத்தொடர்ந்து வழக்கு விசாரணை மீண்டும் 21-ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

# கவர்னர் ஆர்.என்.ரவி திடீர் டெல்லி பயணம்

**சென்னை, மே 16-**

கவர்னர் ஆர்.என்.ரவி டெல்லிக்கு புறப்பட்டு சென்றார்.

கவர்னர் ஆர்.என்.ரவி திடீர் பயணமாக டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார். நேற்று காலை 6.50 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார். அவருடன் கவர்னரின் தனி செயலாளர், உதவியாளர், பாதுகாப்பு அதிகாரி ஆகியோரும் சென்றுள்ளனர்.

பிரதமர் அலுவலகம் அழைத்ததின் பேரில் கவர்னர் டெல்லிக்கு சென்று இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. டெல்லி செல்லும் கவர்னர் ஆர்.என்.ரவி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, சட்ட நிபுணர்களை சந்தித்து பேச உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கவர்னர்கள் அனுப்பும் மசோதாக்கள் மீது 3 மாதங்களுக்குள் முடிவெடுக்க ஜனாதிபதிக்கு சுப்ரீம் கோர்ட் காலக்கெடு விதித்த நிலையில், நேற்று சுப்ரீம் கோர்ட்டிடம் ஆலோசனை கருத்தை பெறும் வகையில் 14 கேள்விகளை ஜனாதிபதி திரௌபதி முர்மு எழுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உ.பி யில் டபுள் டெக்கர் பஸ்சில் தீ; குழந்தைகள் உட்பட 5 பேர் பலி

**லக்னோ, மே 16-**

லக்னோவில் டபுள் டெக்கர் பஸ்சில் ஏற்பட்ட தீ விபத்தில் குழந்தைகள் 2 பேர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

பீஹாரில் இருந்து டில்லிக்கு டபுள் டெக்கர் பஸ்சில் 70-க்கும் மேற்பட்டோர் சென்று கொண்டிருந்தனர். லக்னோ அருகே பஸ் சென்று கொண்டு இருந்த போது தீ விபத்து ஏற்பட்டது. உள்ளூர்வாசிகளும், தீயணைப்பு படையினருடன் இணைந்து நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில், குழந்தைகள் 2 பேர் உட்பட 5 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். தீ விபத்திற்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சிலர் காயம் அடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், சம்பவ இடத்தில் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தவும் மாவட்ட நிர்வாகத்திற்கு யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டார்.

# தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு: ராகுல் வலியுறுத்தல்

**பாட்னா, மே 16-**

தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும் என்றும் 50% இடஒதுக்கீடு உச்சவரம்பு எனும் சுவரை உடைக்க வேண்டும் என்றும் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

பிஹாரின் தர்பங்காவில் உள்ள அம்பேத்கர் மாணவர் விடுதியில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய ராகுல் காந்தி, ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ.க. கூட்டணி அரசு, நான் இங்கு வருவதையும் உங்கள் முன் பேசுவதையும் தடுக்க முனைந்தது. உங்களைப் போன்ற மாணவர்களின் ஆதரவு எனக்கு இருப்பதால் என்னை தடுத்து நிறுத்துவதில் அவர்கள் தோல்வியடைந்தனர். இந்த சர்வாதிகார அரசாங்கம் எவ்வளவு முயற்சி செய்தாலும், நமது குரலை அடக்க முடியாது. கல்விக்காக அரசாங்கம் பணத்தை செலவிட வேண்டும். 50% இடஒதுக்கீடு என்ற உச்ச வரம்பை உடைக்க வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு இருக்க வேண்டும். நாட்டில் தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 24 மணி நேரமும் அநீதியை எதிர்கொள்கின்றனர். பாகுபாடு காட்டப்பட்டு கல்வி முறையிலிருந்து அவர்கள் தடுக்கப்படுகிறார்கள்.

எனவேதான், சாதிவாரி கணக்கெடுப்பு முறையான முறையில் நடத்தப்பட வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்துகிறது. மேலும், தனியார் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட வேண்டும்.

பொதுமக்களின் அழுத்தம் மற்றும் பயம் காரணமாக, சாதி கணக்கெடுப்பு குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். உண்மையில் அவர் சாதிவாரி கணக்கெடுப்பையும், அரசியலமைப்பையும் எதிர்க்கிறார். இந்த அரசாங்கம் உங்களைப் பற்றி அல்ல, அதானி மற்றும் அம்பானியைப் பற்றி மட்டுமே அக்கறை கொள்கிறது'' என தெரிவித்தார்.

# வனத்துறை ஊழியர்கள் கவனமுடன் பணியாற்ற அமைச்சர் வேண்டுகோள்

**சென்னை, மே 16-**

வனத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் பணியின் போதும் எச்சரிக்கையாகவும் பாதுகாப்புடனும் செல்லவேண்டும் என வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பகுதியில் பணிபுரியும் வனவர் கார்த்திகேயன் மற்றும் வனக் காவாளர் திவாகர் இருவரும் புதன்கிழமை (மே14) மாலை ஊத்தங்கரையில் இருந்து மத்தூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது மத்தூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கமலாபுரம் கிராமம் அருகே உள்ள முருகர் கோவில் அருகே தேசிய நெடுஞ் சாலை எண் 77 -ல், பெங்களூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கி வந்த கர்நாடகா அரசு பேருந்து மோதி வன காவலர் மற்றும் வனவர் இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்ட செய்தியை அறிந்து மிகவும் மன வருந்தம் அடைந்தேன். பாதிக்கப்பட்ட வன பணியாளர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத்துறையில் பணியாற்றும் வனக்காவலர், வனக்காப்பாளர் உட்பட அனைவரும் பணியின் போதும், சாலையில் பயணிக்கும் போதும் மிகவும் எச்சரிக்கையாகவும் பாதுகாப்புடனும் செல்லவேண்டும் என அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இ.யூ.மு.லீக் தேசிய தலைவராக தேர்வு: காதர் மொகிதீனுக்கு முதல்வர் வாழ்த்து



**சென்னை, மே 16-**

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவராக காதர் மொகிதீன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காதர் மொகிதீனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவராக காதர் மொகிதீன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராக தேர்வான காதர் மொகிதீனுக்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவராக மூன்றாவது முறையாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மதிப்பிற்குரிய பேராசிரியர் காதர் மொகிதீனுக்கு எனது வாழ்த்துகள்!

பண்பும் அரசியல் முதிர்ச்சியும் மதிக்கூர்மையும் பெற்ற பேராசிரியர் ஐயாவின் தலைமையில், இந்தியாவின் மதச்சார்பின்மையையும் மத நல்லிணக்கத்தையும் வலுப்படுத்தும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சீரிய மக்கள் பணி சிறக்கட்டும்!" இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# ராணுவ அதிகாரி சோபியா குறித்து சர்ச்சை கருத்து: பா.ஜ.க. அமைச்சருக்கு சுப்ரீம் கோர்ட் கண்டனம்



**புதுடெல்லி, மே 16-**

அரசியலமைப்பு பதவிகளை வகிக்கும் நபர்கள் பேச்சில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கண்டித்துள்ளார்.

இந்திய ராணுவ அதிகாரி கர்னல் சோபியா குரேஷி குறித்த மத்தியப் பிரதேச அமைச்சர் விஜய் ஷாவின் சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு சுப்ரீம் கோர்ட் நேற்று கடுமையாகக் கண்டனம் தெரிவித்தது.

விஜய் ஷாவின் கருத்து குறித்து கேள்வியெழுப்பிய சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கவாய், அரசியலமைப்பு பதவிகளை வகிக்கும் நபர்கள் பேச்சில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் உயர் நீதிமன்றத்தில் மன்னிப்பு கேளுங்கள்.'' என்று தெரிவித்தார்.

"ஒரு நாளில் உங்களுக்கு எதுவும் நடக்காது. நீங்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும்.'' என்று தெரிவித்த சுப்ரீம் கோர்ட், கைது செய்யப்படுவதிலிருந்து இடைக்கால பாதுகாப்பு கோரிய விஜய் ஷாவின் மனுவையும் நிராகரித்தது. மேலும், விஜய் ஷாவுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்க உத்தரவிட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தடை விதிக்கவும் சுப்ரீம் கோர்ட் மறுத்துவிட்டது.

அமைச்சர் விஜய் ஷா மீது வழக்குப் பதிவு செய்யுமாறு காவல் துறைக்கு மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது. முன்னதாக, மே 12-ம் தேதி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அமைச்சர் விஜய் ஷா, "அவர்கள் (பயங்கரவாதிகள்) நமது சகோதரிகளின் சிந்தூரை அழித்தனர். அவர்களை அழிக்க நாம் அவர்களின் சகோதரியை அனுப்பி பழிவாங்கினோம் என்று சர்ச்சைக்குரிய வகையில் பேசினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# வரும் 2026 தேர்தலில் யாருடன் கூட்டணி..?

## த.வெ.க. துணை பொதுச்செயலாளர் விளக்கம்

**சென்னை, மே 16-**

2026 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி குறித்த முடிவுகளை உரிய நேரத்தில் தலைவர் விஜய் எடுப்பார் என த.வெ.க. துணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார் .

இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது: கொள்கை எதிரி பா.ஜ.க., அரசியல் எதிரி தி.மு.க.வுடன் த.வெ.க. கூட்டணி அமைக்காது.இரு கட்சிகளுடன் கூட்டணி இல்லை என்று த.வெ.க. தலைவர் விஜய் கூறியுள்ளார். கூட்டணி குறித்து பிற கட்சிகள் பேசுவதை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. தேர்தல் கூட்டணி பற்றி உரிய நாளில் த.வெ.க. தலைவர் விஜய் அறிவிப்பார். என தெரிவித்துள்ளார் .

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு

**தர்மபுரி, மே 16-**

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமான ஒகேனக்கல்லுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 700 கன அடியில் இருந்து 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

தமிழக காவிரி நீர் படிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து உயர்ந்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தேசிய ஜனநாயக கூட்டணியில் தான் இருக்கிறோம்: ஓ.பி.எஸ்.



**சென்னை, மே 16-**

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தான் இருக்கிறோம் என்றும் சென்னை வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தங்களை அழைக்காதது வருத்தமளிப்பதாக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் நேற்று ((மே 15) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

சென்னை வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, எங்களை அழைக்காதது வருத்தமே. நாங்கள் இது வரை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தான் இருக்கிறோம். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எங்களது நிலைபாட்டை தெரிவித்து விட்டோம். மாவட்டம் வாரியாக ஆய்வு செய்து தேர்தல் கூட்டணிக் குறித்து விரைவில் அறிவிப்போம். கூட்டணி தொடர்பாக யாருடனும் மறைமுகமாக பேசவில்லை. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் வழங்கப்பட்டது தற்காலிகமானதே. தவெக தலைவர் விஜய் நல்ல இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஜனாதிபதி 14 வினாக்களுக்கு விளக்கம் கேட்டு, சுப்ரீம் கோர்ட்டை அணுகியிருப்பது, அரசியலமைப்பு சட்டத்தின் சாரத்துக்கு எதிரானது, இதுபோன்ற வினாக்களை எழுப்புமாறு குடியரசுத் தலைவருக்கு வழிகாட்டிய மத்திய அரசின் செயல் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது.

- முத்தரசன்



ரூ.7 கோடி மட்டுமே கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்க நிதி எங்கிருந்து கிடைக்கும்? அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும்?

- ராமதாஸ்



மத்திய அரசு அம்பானி, அதானி மற்றும் அவர்களைப் போன்றவர்களின் நலன்களுக்கு சேவை செய்கிறது என்பது உண்மைதான். தற்போதைய சிஸ்டம் மக்கள் தொகையில் ஐந்து சதவீதத்தினரின் நலனுக்காக செயல்படுகிறது. தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு அரசாங்கம் உள்ளிட்டவைகளில் எந்தப் பங்கும் இல்லை.

- ராகுல் காந்தி



சிப்காட் தொழிற்சாலையில் டேங்கர் வெடித்ததால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இரசாயனக் கழிவுநீரை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் மருத்துவ முகாம்களை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அன்புமணி

தென்காசி வடக்கு மாவட்டத்தில்

## பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வந்த கனிமொழி எம்.பி.க்கு ராஜா எம்எல்ஏ தலைமையில் உற்சாக வரவேற்பு



சங்கரன்கோவில். மே.16.

தென்காசி வடக்கு மாவட்டத்தில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த திமுக துணை பொது செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி எம்பிக்கு சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் நகராட்சி அருகே வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்பு நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, பரமகுரு மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துசெல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா பொதுக் குழு உறுப்பினர் மாரிசாமி, மகேஸ்வரி, பராசக்தி, வேல்சாமி பாண்டியன், சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பொன்முத்தையா பாண்டியன், பூசைப்பாண்டியன், பெரியதுரை, வெள்ளத்துரை, ராமச்சந்திரன், பால்ராஜ், நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி அந்தோணிசாமி, நகராட்சி சேர்மன்கள் சங்கரன்கோவில் உமா மகேஸ்வரி, புளியங்குடி விஜயா, மாவட்ட மருத்துவர் அணி தலைவர் சுமதி, மாவட்ட வக்கீல் அணி அமைப்பாளர் பிச்சையா, இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ், மாணவரணி அமைப்பாளர் உதயகுமார் , சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் நாகூர்கனி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் காசிராஜன், மகளீர் அணி தலைவர் அன்புமணி கணேசன், தொமுச மண்டல அமைப்பு செயலாளர் மைக்கேல் நெல்சன், மின் வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், தொமுச சங்கர்ராஜ், முன்னாள் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சுப்பையா, முன்னாள் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் முனியசாமி, முன்னாள் நகர செயலாளர் ராஜதுரை, சேர்மன் பாலசுப்பிரமணியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சரவணன், கார்த்தி, ராஜராஜன், மாவட்ட சுற்று சூழல் அணி துணை அமைப்பாளர் ஜலால், விவசாய தொழிலாளர் அணி முருகராஜ், தொழிலாளர் அணி பாலசுப்ரமணியன், தகவல் தொழில்நுட்ப அணி ரஜினிகாந்த், சிவசங்கர நாராயணன் , வார்டு செயலாளர்கள் வாழைக்காய் துரைபாண்டியன், தடிகாரன், ராமலிங்கம், வீரா, வெங்கடேஷ், மற்றும் ஜெயக்குமார், பாலாஜி, ஜான்சன் , மாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டத்திற்க்கு வருகை தந்த தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி எம்.பிக்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே ஜெயபாலன் சிறப்பான வரவேற்பு அளித்தார். உடன் திமுக மகளிரணியினர் உள்ளனர்.



தென்காசி இரண்டாம் நிலை நூலகர் அண்ணாமலைசாமி மகன் 10 வகுப்பு சிபிஎஸ்சி தேர்வில் 493/500 மாவட்டத்தில் முதலிடம் பெற்று உள்ளார். அவரை வீ.கே.புரம் மனு நிதி நாளில் பழனிநாடார் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் பாராட்டினார்.



தென்காசிமாவட்டம்சங்கரன்கோவில்வட்டத்தில்வருவாய்த்துறைஆண்டு1434பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர்தலைமையில் நடைபெற்றது.



தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் டாக்டர் .செல்லத்துரை பிறந்த நாளில் ஆய்க்குடி சேர்மன் சுந்தர , புளியரை ஒன்றிய கவுன்சிலர் சுப்புராஜ், கடையம் ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், செங்கோட்டை ஒன்றியம் புதூர் பேரூராட்சி செயலாளர் கோபால் தென்காசி யூனியன் ஒன்றிய துணைச் சேர்மன் கனகராஜ் மாலை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# பிஜேபியுடன் கூட்டணி வைத்து தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் இழைத்தவர் எடப்பாடி பழனிச்சாமி

## மகளிர் அணி பாசறை கூட்டத்தில் கனிமொழி எம்.பி. தாக்கு




சங்கரன்கோவில்.மே.16

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவிலில் வடக்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மற்றும் மகளிர் பாகமுகவர்கள் கூட்டம் மற்றும் பாசறை கூட்டம் நடந்தது கூட்டத்திற்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். மாவட்ட மகளிர் அணி தலைவர் அன்புமணி கணேசன், துணைத்தலைவர் அண்ணாமலை, துணை அமைப்பாளர்கள் செல்வி, கவிதா, கிருஷ்ணலீலா,சுதா , லாவண்யா, பொண்ணுதுரைச்சி ,கற்பகம் ,மகளிர் தொண்டரணி தலைவர் உமா மகேஸ்வரி, துணைத்தலைவர் லைலா பானு,துணை அமைப்பாளர்கள் அன்னலட்சுமி, ராமலட்சுமி, தமிழ்செல்வி, விஜயலட்சுமி, பிரபாவதி, உமாதேவி முன்னிலை வகித்தனர். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சிவசங்கரி வரவேற்றார். நிகழ்ச்சியில் தென்காசி எம்பி ராணி ஶ்ரீ குமார், மாநில மகளிர் அணி செயலாளர் முன்னாள் எம்பி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி இணை செயலாளர் தமிழரசி எம்எல்ஏ மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் முத்துசெல்வி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். தொடர்ந்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல் ஏ தலைமை உரையாற்றினார் அதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராக திமுக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கலந்து கொண்டு பேசியதாவது,

தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போதே முதலமைச்சர் விடியல் பயணம் என்னும் மகளிர்க்காக கட்டணம் இல்லா பேருந்து பயணம் திட்டத்தில் முதல் கையெழுத்திட்டவர் தமிழ்நாடு முதலமைச்சர். இந்த திட்டத்தினால் பெண்களுக்கு நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய பேருந்துகளில் கட்டணம் கிடையாது. யாரையும் எதிர்பார்த்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அந்த விடியல் பயணம் பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது தொடர்ந்து மகளிர் உரிமைத்தொகை 1000 ரூபாய் வழங்கப்படுகிறது. இன்னும் சில பேருக்கு அது வரவில்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும், தற்போது ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு அந்த உரிமை தொகை கிடைத்திருக்கிறது. முதல்வர் சட்டமன்றத்தில் அறிவித்ததை போல மகளிர் உரிமைத்தொகை கிடைக்காதவர்களுக்கு மீண்டும் முகாம் நடத்தி அதன் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் உங்கள் பகுதிகளில் விடுபட்டவர்களுக்கு 1000 ரூபாய் உரிமை தொகை நியாயமாக கிடைக்க எப்படி அதில் பதிவு செய்ய வேண்டும் என்பதை எடுத்து சொல்லவேண்டும். சிலர் பதிவு செய்யக்கூடிய நேரங்களில் தவறாக பதிவு செய்தால் அவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய உரிமை தொகை கிடைக்காமல் போகும் சூழ்நிலை அமையும். அதற்கு மகளிர் அணியினர் பொதுமக்களுக்கு உதவி செய்ய வேண்டும்.அதே போல தற்போது தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில் பொதுமக்கள் எந்த நேரம் ஆனாலும் எம்பி, எம்எல் ஏவை சந்தித்து குறைகளை சொல்ல முடியும் என்று சூழ்நிலையில், உங்கள் பகுதியில் சாலை வசதி, தண்ணீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து வலியுறுத்தி உங்கள் பகுதி மக்களுக்கு செய்தி தர வேண்டும். இவ்வாறு செய்து தரும் பட்சத்தில் அடுத்த முறை உள்ளாட்சி தேர்தல் நேரத்தில் நீங்கள் போய் அவர்களிடம் வாக்கு கேட்கும் பொழுது நமக்கு உதவி செய்தவர்கள் என்ற எண்ணத்தில் உங்களை வரவேற்பார்கள். வாக்களிப்பார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் உயர் கல்வி படிப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ரூபாய் 1000 மாதம் வழங்கி வருகின்றார். இதனால் இன்று உயர்கல்வியிலே தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிகமாக உயர் கல்விக்கு போகக்கூடிய பெண்களை உருவாக்கி உள்ளது. காலை உணவு திட்டம் தமிழ்நாட்டில் தான் முதல் முதலில் மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது. குழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடிய குழந்தைகளுக்கு மதிய உணவு திட்டத்தை முதல் முதலில் நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது சென்னையிலே சில பள்ளிகளில் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜர் அதை மதிய உணவு திட்டமாக மிகப்பெரிய அளவிலே தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பள்ளிகளிலே கொண்டு வந்தார்கள். அதை சத்துணவு திட்டமாக மாற்றியது முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை கொண்டு வந்துள்ளார். காலை உணவு திட்டத்தால் பள்ளிக்கு வரும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்று ஒரு ஆய்வு கூறுகிறது. இப்படி ஒவ்வொரு திட்டத்திற்கு பின்னால் இந்த சமூகத்தில் ஒரு மாற்றம் ஒரு வளர்ச்சி அதை கொண்டு வருவது தான் திராவிட மாடல் ஆட்சி. கலைஞர் ஆட்சி காலத்தில் பெண்கள் தங்கள் சொந்த காலில் இன்று சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களை தொடங்கினார். மேலும் தேர்தலில் பெண்களுக்கு 33% உள்ளாட்சியில் இட ஒதுக்கீடு கொண்டு வந்த போது பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு மிக அதிக அளவில் வெற்றி பெற்றார்கள். திமுக அரசு தேர்தலில் சொன்ன வாக்குறுதியை எப்பொழுதுமே நிறைவேற்ற தவறியது கிடையாது.

பிஜேபி ஆட்சி செய்யக்கூடிய ஒரு மாநிலத்தில் தேர்தலுக்கு முன்னால் 4 முதல் 5 மாதங்கள் வரை மகளிர் உரிமைத் தொகை வழங்கினார்கள். ஜெயித்தவுடன் அந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு நிறைய பேர் கூட்டணி சேர்ந்து ஜெயித்து விடலாம் என நினைக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்களோடு கூட்டணி இருக்கிறது.

சமூக வலைத்தளங்களில் சில தவறான பதிவுகளை பதிவிட்டு மக்களை திசை திருப்பி விடலாம் என நினைக்கின்றார்கள். அது ஒருபோதும் நடக்காது. எத்தனையோ இடங்களில் அதுவும் முக்கியமாக சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக தொடர்ந்து பதிவுகளை நாம் பார்த்து கொண்டு உள்ளோம். அதிமுக இத்தனை வருஷமா பிஜேபியை எதிர்க்கிறோம், அவர்கள் தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்கிறார்கள் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார். இப்போது தற்போது தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு பிஜேபியுடன் கூட்டணி வைத்து உள்ளார்.தமிழ்நாட்டில் கட்டாயமாக இந்தி படித்தால்தான் உங்களுக்கு தர வேண்டிய கொடுக்க முடியும் என கூறி நிதியை 2000 கோடிக்கு மேல் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருப்பது தெரிந்தும் பழனிசாமி பிஜேபியுடன் கூட்டணி வைத்து உள்ளார்.முன்னாள் முதல்வர் கலைஞர் தமிழ்நாட்டுக்காக எத்தனையோ திட்டங்களை கொண்டு வந்து உள்ளார்

அதே வழியில் ஆட்சி செய்து வரும் தற்போதைய தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாட்டிற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார் இதை நீங்கள் அனைவரும் மக்களிடம் எடுத்துக் கூறி திமுகவுக்கு ஏன் ஓட்டு போட வேண்டும் என்பதை புரிய வைக்க வேண்டும். பாக முகவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பணிகளை நோயாக முறையாக கண்காணித்து செயல்பட வேண்டும். இவ்வாறு இவ்வாறு அனைத்து பணிகளையும் சிறப்பாக செய்து உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது புதிதாக பொறுப்பேற்று உள்ளவர்கள் உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகிறேன் என பேசினார்.

கூட்டத்தில் சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளரும், புளியங்குடி நகராட்சி சேர்மனுமான விஜயா நன்றி கூறினார்.

## கோவில்பட்டி முத்துமாரியம்மன் கோவிலில் வைகாசி மாத பிறப்பு சிறப்பு பூஜை



கோவில்பட்டி மே 16

கோவில்பட்டி கதிரேசன் ரோட்டில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலில் வைகாசி மாத பிறப்பு சிறப்பு பூஜை நடைப்பெற்றது. இதனையொட்டி வெற்றி விநாயகர், முத்துமாரியம்மன், சந்தன கருப்பசாமிக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனை நடைப்பெற்றது. பூஜைகளை சுப்ரமணிய சுவாமி செய்தார். இதில் சுற்று வட்டார மக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை கோவில் தலைவர் தங்கவேல் செயலார் மாரிச்சாமி பொருளாளர் லட்சுமனன் செய்தனர்.



தென்காசி மாவட்டத்திற்க்கு வருகை தந்த தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே ஜெயபாலன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர்வழக்கறிஞர் கனிமொழி சிறப்பான வரவேற்பு அளித்தார்

## திருச்செந்தூர் வட்டத்தில் ஜமாபந்தி தொடக்கம்



**திருச்செந்தூர், மே 16**

திருச்செந்தூர் தாலுகாவில் வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு (ஜமாபந்தி) தொடங்கி, வருகிற 19ம் தேதி வரை நடக்கிறது. தாலுகா அலுவலகத்தில் நடந்த ஜமாபந்தியில் நேற்று உடன்குடி உள் வட்டத்துக்குட்பட்ட செம்மறிக்குளம், குதிரைமொழி, பரமன்குறிச்சி, நங்கைமொழி, மெஞ்ஞானபுரம், மானாடு தண்டுபத்து மற்றும் லெட்சுமிபுரம் ஆகிய கிராம மக்களிடம் இருந்து தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நெடுஞ்சாலைகள்) சரவணன் மனுக்களைப் பெற்றுக்கொண்டார். மொத்தம் பெறப்பட்ட 27 மனுக்களில் உடனடி தீர்வு காணப்பட்டு 12 பேருக்கு பட்டா (பெயர் மாற்றம்) வழங்கப்பட்டது. மீதி மனுக்கள் விசாரணையில் உள்ளது.

இதில் திருச்செந்தூர் தாசில்தார் பாலசுந்தரம், தனி தாசில்தார் (நெடுஞ்சாலைகள்) லெனின், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் ரதிகலா, தலைமை சர்வேயர் தாகூர் ஹமீது உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். இன்று (வியாழக்கிழமை) வாகைவிளை, செட்டியாபத்து, காலான்குடியிருப்பு, உடன்குடி, வெங்கட்ராமானுஜபுரம், ஆதியாக்குறிச்சி மற்றும் குலசேகரன்பட்டினம் ஆகிய கிராம மக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்படுகின்றன.

## வேல்ஸ் பப்ளிக் பள்ளியில் சாதனை படைத்த மாணவ-மாணவிகளுக்கு பாராட்டு



**சங்கரன்கோவில், மே.16-**

சங்கரன்கோவில் வேல்ஸ் பப்ளிக் பள்ளி (சீனியர் செகண்டரி சி.பி.எஸ்.இ.) மாணவர்கள் 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 96 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று ராபர்ட் பாண்டியன் முதலிடமும், 95 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று மாரியப்பன் இரண்டாம் இடமும் பிடித்துள்ளனர். மேலும் 20 மாணவர்கள் 80 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 96 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று காவிய ஸ்ரீ முதல் இடமும், 95 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று வினு இரண்டாம் இடமும் பிடித்துள்ளனர். மேலும் 25 மாணவர்கள் 80 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

சி.பி.எஸ்.இ. பொதுத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களை அழைத்து பள்ளி நிர்வாகம் சார்பில் பள்ளியின் தாளாளர் சண்முகசாமி, பள்ளியின் முதல்வர் ஜெயபாரதி மற்றும் துணை முதல்வர் அகல்யா ஆகியோர் பாராட்டு தெரிவித்து கௌரவித்தனர்.

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கான கடன் வழங்கும் விழா: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி மே.16:

தென்காசி மாவட்டம் இலத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கான கடன் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

இலத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் இலத்தூர், பகவதிபுரம், பாலமார்த்தாண்டபுரம், மற்றும் சாம்பவர்வடகரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கான கடன் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வோளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் சுய உதவிக்குழு கடன் மற்றும் மத்திய கால கடன்கள் வழங்குவதற்கான சிறப்பு முகாம் கடந்த 15.05.2025 முதல் 17.05.2025 வரை நடைபெறுகிறது,

இது போன்ற கடன் வழங்கும் விழாக்கள் மேலகரம், நயினாகரம், புளியங்குடி, சங்கரன்கோவில், மற்றும் திருவேங்கடம் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது 16.05.2025 கீழப்பாவூர், ஆலங்குளம், கடையம், வாசுதேவநல்லூர், செண்பகாபுரம், குருவிகுளம் ஆகிய பகுதிகளில் கடன் வழங்கும் விழாக்கள் நடைபெற உள்ளன என்றும் தெரிவித்தார். மேலும் இந்த கடன் முகாமில் பங்கேற்க முடியாதவர்கள் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை அணுகி உரிய ஆவணங்களை அளித்து, தங்களுக்கு தேவையான கடன்களை பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

விழாவில், 29 நபர்களுக்கு ரூ.ஒரு கோடியே பன்னிரெண்டு இலட்சம் அளவிற்கு சுயஉதவிக்குழு கடன்கள், மத்திய கால கடன்கள், மாற்றுத்திறனாளி கடன்கள், டாப்செட்கோ கடன்கள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், வழங்கினார்.

மேலும் 564 நபர்களுக்கு 12.20 கோடி அளவிற்கு பல்வேறு வகையான கடன்கள் வழங்கிட கடன் விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தென்காசி மண்டல இணைப்பதிவாளர் நரசிம்மன், துணைப் பதிவாளர்கள் பூர்விசா, கோபிநாத், கூட்டுறவு சார்பதிவாளர்கள் மாரியப்பன், மல்லிகா, ஸ்ரீவித்யா, சண்முகப்ரியா, சங்க செயலாளர்கள், சங்க பணியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டத்தில்

# தனியார் பள்ளி வாகனங்கள் வருடாந்திர ஆய்வு செய்யும் பணி: மாவட்ட கலெக்டர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது



நெல்லை . மே .16.

நெல்லை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் வருடாந்திர ஆய்வு செய்யும் பணி நெல்லை மாவட்ட ஆட்சியர் சுகுமார் தலைமையில் பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்றது மொத்தம் மாவட்டத்தில் உள்ள 578 பள்ளி வாகனங்கள் ஆய்வுக்கு கொண்டுவரப்பட்டது மாவட்ட ஆட்சியர் சுகுமார் நேரடியாக ஒவ்வொரு வாகனத்திலும் ஏறி ஆய்வு மேற்கொண்டார்

வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் அவசர உதவி பெட்டி அணைப்பான் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள கேமராக்கள் வாகனத்தில் தரை தளம் உள்ளிட்டவைகளை ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்காக வந்த வாகனம் ஒன்றை செயல்முறை சோதனை நடத்திய மாவட்ட ஆட்சியர் வாகனத்தின் அவசர கட்டுப்பாட்டு கதவுகளை திறந்து பயணிகளை வெளியேற்றுவது தொடர்பான செய்முறை செய்து காட்ட டிரைவர்களுக்கு உத்தரவிட்டார்.

அப்போது அந்த வாகனத்தில் அவசரக் கதவை திறக்க முடியாத நிலை ஏற்பட்டது இதனால் மாவட்ட ஆட்சியர் அதிருப்தி அடைந்து அதிகாரிகளிடம் கடிந்து கொண்டார் முதல் வாகனத்திலேயே அவசர கதவு திறக்காததால் அதிருப்தி அடைந்த அவர் அடுத்த வாகனங்களில் தீவிர ஆய்வு மேற்கொண்டார்

ஒவ்வொரு வண்டிகளாக சென்று தீயணைப்பான் மற்றும் ரிசர்வ் கேமராக்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அறிவுறுத்தி உள்ளார் நடந்துள்ள தணிக்கை தேர்ச்சி பெறாத வாகனங்கள் ஒரு வாரத்திற்குள் சரி செய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஆய்வில் கலந்து கொள்ளாத வாகனங்களை பத்து நாட்களுக்குள் ஆய்வு நடத்த கொண்டு வரவும் உத்தரவு பிறவிக்கப்பட்டுள்ளது இதனிடையே பள்ளிகளில் பயன்படுத்தப்படும் பஸ் ,வேன் உள்ளிட்ட வாகனங்களை மட்டும் அதிகாரிகள் ஆய்வு நடத்தாமல் பள்ளிகளுக்கு பயன்படுத்தக்கூடிய ஆட்டோ,ஷேர் ஆட்டோ, கார் உள்ளிட்டவைகளை அதிகாரிகள் இது போன்று தீவிர ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரிக்கையை பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ளது. ஆட்சியர் இது குறித்து நடவடிக்கை எடுக்கபடுமா? என்பதை பொறுத்து இருந்து பார்போம்.

# தென்காசி அரசு மருத்துவமனையில் உலக செவிலியர் தின விழா



தென்காசி மே.16:

தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உலக செவிலியர் தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

மருத்துவமனை கண்காணிப்பாளர் (பொறுப்பு) உறைவிட மருத்துவர் செல்வபாலா தலைமையில், தலைமை மருத்துவர் ஜெஸ்லின் முன்னிலையில் விடிஎஸ்ஆர் குழும நிறுவனர் இம்ரான் கான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியினை செவிலியர் உமா மஹேஸ்வரி , செவிலியர் மல்லிகா ஆகியோர் தொகுத்து வழங்கினார். செவிலியர் உமா மஹேஸ்வரி வரவேற்புரை வழங்கினார். செவிலியர் கண்காணிப்பாளர் ஜெகதா வாழ்த்து மடல் வாசித்தார், செவிலியர் கண்காணிப்பாளர் பத்மாவதி, ராசாத்தி ஜெகதா,வசந்தி மற்றும் முத்துலெட்சுமி ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். தலைமை மருத்துவர் ஜெஸ்லின் , மருத்துவமனையின் முதுகெலும்பாக திகழும் செவிலியர்கள் என பாராட்டி, தியாக மனப்பான்மையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் அனைத்து செவிலிய சகோதர, சகோதரிகளுக்கும், செவிலியர் தின வாழ்த்துக்களை கூறி அனைவருக்கும் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

தலைமை மருத்துவர் ஜெஸ்லின் அனைத்து செவிலியர்களின் சார்பாக தலைமைச் செவிலியர் பத்மாவதி, தென்காசி மருத்துவமனையோடு இணைந்து செயலாற்றும் விடிஎஸ்ஆர் குழும நிறுவனர் இம்ரான்கான் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். விடிஎஸ்ஆர் குழும நிறுவனர் இம்ரான்கான் அனைவரையும் வாழ்த்தி பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து செவிலிய சகோதர சகோதரிகளின் ஆட்டம் பாட்டம் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அனைவருக்கும் மருத்துவர் ஜெஸ்லின் பரிசுகள் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்த அனைவருக்கும் செவிலியர் கண்காணிப்பாளர் ஜெகதா நன்றி தெரிவித்தார்.

# தென்காசி மாவட்ட கலெக்டரிடம் அதிமுக எம்எல்ஏக்கள் கோரிக்கை மனு



**தென்காசி மே.16:**

அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணமுரளி, இசக்கிசுப்பையா ஆகியோர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனு வழங்கினர் அம்மனுவில்

வனத்துறையினர் சுற்றுலாப் பயணிகளை அப்புறப்படுத்துவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து பேசினர். அவரும் விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார் எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக இந்த பிரச்சனையில் தலையிட்டு பழைய குற்றாலம் அருவியில் காவல்துறையினர் வனத்துறையினர் குறுக்கீடு இல்லாமல் வழக்கம் போல் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் 24 மணி நேரமும் குளிக்க அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

கோரிக்கை மனுவினை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அரசு உயரதிகாரிகளிடம் கலந்து பேசி விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார் இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் தமிழக சட்டத்துறை அமைச்சர் இசக்கி சுப்பையா, கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் செ.கிருஷ்ண முரளி (எ) குட்டியப்பா, ஆயிரப்பேரி ஊராட்சி மன்ற தலைவர் சுடலையாண்டி, மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவர் தி.உதயகிருஷ்ணன், அதிமுக மாவட்ட அவைத் தலைவர் வி.பி. மூர்த்தி, குற்றாலம் பேரூராட்சி மன்றத் தலைவர் எம்.கணேஷ் தாமோதரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்தில்

# பட்டா மாற்றத்திற்கு இ-சேவை அல்லது ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கலாம் :கலெக்டர் தகவல்

தென்காசி மே.16 :

தென்காசி மாவட்டத்தில் பட்டாவிலுள்ள இறந்த நில உடைமைதாரர்களின் பெயர்களை நீக்கி வாரிசுதாரர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணம் வாயிலாக உரிமை பெற்றவர்களின் பெயர்களை சேர்க்க பொதுமக்கள் உரிய ஆவணங்களுடன் இ-சேவை மையங்களின் வாயிலாகவோ அல்லது *Citizen Portal* வாயிலாகவோ விண்ணப்பிக்கலாம்

தமிழ்நாடு முழுவதுமுள்ள கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களின் நில ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டு, இணையவழியில் பொதுமக்கள் அனைவரும் எளிதில் பார்வையிடும் வகையிலும், அச்சிட்டு பயன்படுத்தும் வகையிலும், *https://eservices.tn.gov.in/* என்ற இணையதளத்தின் வாயிலாக பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. இருப்பினும், பல சிட்டாவிலுள்ள பட்டாதாரர்களுள் இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்படாமலும் அவர்களின் பெயர்களுக்கு பதிலாக வாரிசுதாரர்களின் பெயர்கள் அல்லது தற்போதைய உரிமையாளர்களின் பெயர்கள் சேர்க்கப்படாமலும் உள்ளன.எனவே, பட்டாவிலுள்ள இறந்த நில உடைமைதாரர்களின் பெயர்களை நீக்கி, அவர்களது வாரிசுதாரர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணம் வாயிலாக உரிமை பெற்றவர்களின் பெயர்களை சேர்க்க பொதுமக்கள் உரிய ஆவணங்களுடன் இ-சேவை மையங்களின் வாயிலாகவோ அல்லது *Citizen Portal* வாயிலாகவோ விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.மேற்படி விண்ணப்பங்கள், ஆவணங்களின் அடிப்படையில் எதிர்வரும் ஜமாபந்தியில் பரிசீலனை செய்யப்பட்டு, பட்டாதாரர்கள் பெயர் மாற்றம் தொடர்பாக உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நில ஆவணங்களில் உரிய மாற்றங்கள் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.



**கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா உட்பட பலர் உள்ளனர்.**




**தென்காசி மாவட்ட காவல்துறை மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டத்தில்மாவட்ட காவல்துறைகண்காணிப்பாளர்அரவிந்த் குற்ற வழக்கில் சிறப்பாக செயல்பட்டதற்காக வழக்கறிஞர் வேலுச்சாமியை பாராட்டி கவுரவப்படுத்தினார்**

# குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியில் மாணவியர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

தென்காசி மே.16

குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் இளநிலை முதலாமாண்டு அரசு உதவிபெறும் பிரிவு, சுயநிதி பிரிவு சேர்க்கைக்கு மாணவியர்கள் தங்கள் விண்ணப்பங்களை இணையதளம் *https://admission.sriparasakthicollege.edu.in/* மூலம் விண்ணப்பிக்க கடைசி தேதி : 19.05.2025 மாணவியர் சேர்க்கை-2025-2026 இளநிலை முதலாமாண்டு விண்ணப்பிக்க விரும்புவோர் உரிய ஆவணங்களுடன் நேரடியாக கல்லூரிக்கு வந்தும் விண்ணப்பிக்கலாம், மேலும் மேற்கண்ட இணையதளத்தின் மூலமும் விண்ணப்பிக்கலாம். 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு சேர்க்கைக்கு மாணவியர்கள் கல்லூரியில் இணையதளம் மூலம் நேரில் வந்து விண்ணப்பிக்கவும், பதிவேற்றம் செய்ய ஏதுவாக மாணவர்கள் சேர்க்கை உதவி மையம் செயல்பட்டு வருகிறது. மாணவியர் சேர்க்கைக்கு*விண்ணப்பிக்க கடைசி தேதி 19.05.2025

மாணவர் சேர்க்கைக்கு 7558146945 9791886019 என்ற கைபேசி எண்களிலும் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளனர்

# ஆடாசோலை-எப்பநாடு சாலையின் தரம் குறித்து நெடுஞ்சாலைப் பணி அதிகாரிகள் குழுவினர் ஆய்வு

**ஊட்டி, மே.16-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி உட்கோட்டம், ஆடாசோலை- எப்பநாடு சாலையில் கி.மீ. 10.4 முதல் கி.மீ. 11.4 வரை நடைபெற்ற சாலைப் பணிகளில்; சாலையின் தரம், உறுதித் தன்மை, அளவுகள் உள்ளிட்டவை குறித்து நெடுஞ்சாலைப் பணிகள் அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்தனர்.

தமிழகம் முழுவதும் நெடுஞ்சாலைத்துறை சார்பாக நடக்கும் சாலை மற்றும் பாலம் கட்டுமான பணிகள் தொடர்பாக உள் தணிக்கை குழு அமைத்து ஆய்வு நடந்து வருகிறது.

இதன்படி, ஊட்டி நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் கீழ் நடந்து வரும் பணிகள் குறித்து ஆய்வு செய்ய, சேலம் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கண்காணிப்பு பொறியாளர் என்.எஸ்.சரவணன் தலைமையில், கோவை(நெ)நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்கோட்டப் பொறியாளர் அ.ச. விஸ்வநாதன், மேட்டுப்பாளையம் (நெ)நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் உதவிக் கோட்டப் பொறியாளர்ஆர். குருமூர்த்தி மற்றும் காங்கயம்(நெ)நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் உதவிப்பொறியாளர் ராஜசேகர் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் உதகை (நெ) கட்டுமானம்(ம) பராமரிப்பு உட்கோட்டத்தில் ஆடாசோலை- எப்பநாடு சாலையில் கி.மீ. 10.4 முதல் கி.மீ. 11.4 வரை நடைபெற்ற சாலைப் பணிகள் குறித்து ஆய்வு நடந்தது. அப்போது சாலையின் தரம், உறுதித் தன்மை, அளவுகள் உள்ளிட்டவை ஆய்வு செய்யப்பட்டன.

ஊட்டி நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டப் பொறியாளர் செ. குழந்தைராஜு, உதகை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உதவிக் கோட்டப் பொறியாளர் ந.ராஜா, உதகை(நெ) தரக்கட்டுப்பாடு உதவிகோட்டப்பொறியாளர் நா. பாரிஜாதம், உதகை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உதவிப் பொறியாளர் இரா.பிரகாஷ், உதகை (நெ) தரக்கட்டுப்பாடு உதவிப்பொறியாளர்கள் ஹம்சா உசேன் மற்றும் பெருமாள் ஆகியோர் பங்கேற்றனர்.

Printed, Published and
Owned by S.Manimaran
and Printed at
Manimaran Printers
11/78, Fourway Main Road,
Gangaikondan,
Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**மழைநீர்
உயிர்நீர்**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி**

**செல்வராஜ், தபெ. முத்தையா,
க எண்.7320/1, முத்து நகர்,
தெற்கு திட்டங்குளம் கிராமம்,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கோவில்பட்டி.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு**

**எனது தாத்தா (தகப்பனாரின் தகப்பனார்) மகாலிங்கம் தபெ. கருப்பண்ணன் என்பவர் கடந்த 06.07.1986. அன்று முடுக்கலான் குளம் கிராமம், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிக்கு
செல்வராஜ்.
மனுதார்,**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி**

**முருகானந்தம்,
தபெ. ராமகிருஷ்ணன்,
க எண்.3/21A, நடுத்தெரு,
எப்போதும் வென்றான்,
ஓட்டப்பிடாரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு**

**எனது தகப்பனார் ராமகிருஷ்ணன் என்பவர் கடந்த 12.02.1976. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிக்கு
முருகானந்தம்,
மனுதார்,**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி**

**முருகானந்தம்,
தபெ. ராமகிருஷ்ணன்,
க எண்.3/21A, நடுத்தெரு,
எப்போதும் வென்றான்,
ஓட்டப்பிடாரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு**

**எனது தாயார் வள்ளியம்மாள் என்பவர் கடந்த 15.06.1991. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிக்கு
முருகானந்தம்,
மனுதார்,**

தமிழ்நாடு அரசு
**தெடாவூர் முதல் நிலைப் பேரூராட்சி, சேலம் மாவட்டம்**

**ந.க.எண்: 150/2025/அ** **மின்னனு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு** **நாள். 29.04.2025**

2025-2026ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு மேம்பாடு திட்டம் கூடுதல் நிதியில் (TURIP Additional Allocaiton) கீழ்காணும் பணி மேற்கொள்ள இரண்டு உறைகள் (Two Cover system) கொண்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

**வேலை விபர அட்டவணை**

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய தொகை முன் வைப்புத் தொகை (ரூபாயில்) (Only for Civil Works) | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | தெடாவூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 வடக்கு வீதி, வார்டு எண்.3 அக்ரஹாரம், வார்டு எண்.4 வடக்கு வீதி, வார்டு எண்.4 இரட்டை வீதி, வார்டு எண்.5 செக்கடி தெரு, வார்டு எண்.5 செக்கடி தெரு - 1, வார்டு எண்.5 செக்கடி தெரு 3, வார்டு எண்.9 மண்டூட்டர் தெரு, வார்டு எண்.9 தெற்கு வீதி மற்றும் வார்டு எண்.10 மேலவீதியில் பழுதடைந்த தார்சாலைகளைமேம்பாடு செய்தல். | 139.00 | 2,78,000/- | Class -I | 180 நாட்கள் |

1) செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னனு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. 2) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 3) மின்னனு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

4.முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| அ) ஒப்பந்தப்புள்ளி நமூனா இறக்கம் செய்தல் | 29.04.2025 காலை 10.00 மணி முதல் 20.05.2025 மாலை 3.00 மணி |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 20.05.2025 மாலை 3.00 மணி |
| இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 20.05.2025 பிற்பகல் 3.30 மணி |

5) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். 6) ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை தெடாவூர் பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**தலைவர்,
தெடாவூர் பேரூராட்சி மன்றம்,
சேலம் மாவட்டம்**

**செ.ம.தொ.இ / 2288 / ஒப்பந்தப்புள்ளி / 2025**

**செயல் அலுவலர்,
தெடாவூர் முதல் நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்**

தமிழ்நாடு அரசு
**ஈரோடு மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம்
நல்லாம்பட்டி பேரூராட்சி
தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம்
(TURIP) 2025-26 தார்சாலைப்பணி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ந.க.எண்.11/2025** **நாள்: 13.05.2025**

1. முழுமையான விவரங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. ஈரோடு மாவட்டம், நல்லாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் சாலைப் பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் இலவசமாக 13.05.2025 முதல் 30.05.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் : 30.05.2025 மாலை 3.00 மணி
   ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.05.2025 மாலை 3.30 மணி

**செயல் அலுவலர்**
நல்லாம்பட்டி பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்

செ.ம.தொ.இ / **2236** / ஒப்பந்தப்புள்ளி / 2025

# தனக்கு முழு அதிகாரம் வேண்டும்: பி.சி.சி.ஐ.யிடம் காம்பீர் கோரிக்கை

மும்பை, மே 16-

சீனியர் வீரர்கள் இல்லாத இந்திய அணியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தனக்கு முழு அதிகாரத்தை வழங்க வேண்டும் கவுதம் காம்பீர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



**முதல் முறையாக...**

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்டில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி ஜூன் 20-ந் தேதி லீட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது. ஆகஸ்ட் 4-ந் தேதியுடன் இந்த தொடர் முடிவடைகிறது. விராட்கோலி, ரோகித் சர்மா மற்றும் ஆர்.அஸ்வின் போன்ற முன்னணி வீரர்கள் இல்லாமல் முதல் முறையாக இந்திய அணி டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது.

**சீனியர் வீரர்கள் ஓய்வு...**

ஆஸ்திரேலிய பயணத்தின் போது அஸ்வின் பாதியில் ஓய்வு முடிவை அறிவித்தார். ஐ.பி.எல். போட்டி நடைபெற்று இருக்கும் போது ரோகித் சர்மா கடந்த 7-ந் தேதி டெஸ்டில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்தார். அதை தொடர்ந்து கடந்த 12-ந் தேதி யாருமே எதிர்பார்க்காத வகையில் உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேனான விராட்கோலி டெஸ்டில் இருந்து விடைபெறுவதாக அறிவித்தார்.

**முழு அதிகாரம்...**

இந்த நிலையில் சீனியர் வீரர்கள் இல்லாத இந்திய அணியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தனக்கு முழு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடம் (பி.சி.சி.ஐ.) தலைமை பயிற்சியாளர் கவுதம் காம்பீர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான சொந்த மண்ணில் ஏற்பட்ட தோல்வி, ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட தோல்வி போன்று மீண்டும் நடைபெறுவதை தடுக்க தனக்கு முழு சுதந்திரமும், அதிகாரமும் வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**பும்ரா முட்டுக்கட்டை...**

இந்திய அணியில் உள்ள வீரர்களில் தற்போது பும்ரா மட்டுமே காம்பீருக்கு சவாலாக இருப்பார். அவரது செயல்பாடுகளுக்கு பும்ரா முட்டுக்கட்டை போடுவார். அணியின் கேப்டனாக நியமிக்கப்பட இருக்கும் சுப்மன்கில் இளம் வீரர், காம்பீர் சொல்வதை கேட்பார். அவருக்கு சவால் விடக்கூடிய நிலையை சுப்மன்கில் இன்னும் எட்டவில்லை. பும்ரா அடிக்கடி காயம் அடைவதால் அவரை கேப்டனாக நியமிக்க பி.சி.சி.ஐ. விரும்பவில்லை. சுப்மன்கில் கேப்டனாக அதிகமான வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

**ஏற்றுக் கொள்ளுமா?...**

நியூசிலாந்து, ஆஸ்திரேலியா தொடரில் ஏற்பட்ட படுதோல்வியில் காம்பீருக்கான சில அதிகாரங்களை பி.சி.சி.ஐ. பறித்து இருந்தது. தற்போது அணி தனது முழு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். காம்பீரின் கோரிக்கையை கிரிக்கெட் வாரியம் ஏற்றுக் கொள்ளுமா? என்பதை பொறுத்து இருந்து பார்ப்போம்.

# பாலிடெக்னிக்கில் சேர இனிமேல் கணிதம், அறிவியல் தேவையில்லை

## தமிழக தொழில்நுட்ப இயக்ககம் அறிவிப்பு

சென்னை, மே 16-

2025-2026 கல்வி ஆண்டில் அனைத்து பாடப்பிரிவு மாணவர்களும் பாலிடெக்னிக்கில் நேரடியாக 2-ம் ஆண்டு சேர்க்கைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுவரை வேதியியல், இயற்பியல், கணிதம் ஆகிய 3 பாடங்கள் இருக்கும் குரூப் படித்தவர்கள்தான் பாலிடெக்னிக்கில் நேரடியாக 2-ம் ஆண்டு சேர முடியும். இல்லையென்றால் 10-ம் வகுப்பு முடித்தவர்கள் பாலிடெக்னிக்கில் முதலாம் ஆண்டில் இருந்து 3 ஆண்டுகள் படிக்க வேண்டும்.

இந்நிலையில் தமிழக தொழில்நுட்ப இயக்கத்தின் சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் 12-ம் வகுப்பில் எந்த குரூப் படித்திருந்தாலும் பாலிடெக்னிக்கில் நேரடியாக 2-ம் ஆண்டில் சேர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க்காட்சி தொடக்க விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில் பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, குழந்தையை கொஞ்சி மகிழ்ந்தார்.

# வடகாடு மோதல் சம்பவம்: ஐ.ஜி, ஆட்சியர், எஸ்.பி. நேரில் ஆஜராக நீதிமன்றம் உத்தரவு

மதுரை, மே 16-

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு பகுதியில் இருபிரிவினரிடையே நடைபெற்ற மோதல் வழக்கில் திருச்சி ஐ.ஜி, புதுக்கோட்டை ஆட்சியர், எஸ்.பி. நேரில் ஆஜராக அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள து.

வடகாடு கிராமத்தில் பட்டியலினத்தவர்களுக்கு கோயில் வழிபாடு உரிமை மறுக்கப்படுவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு திருமணஞ்சேரியைச் சேர்ந்த சண்முகம் தரப்பில் வழக்கறிஞர், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுத்தாக்கல் செய்தார்.

அதில், வடகாடு மோதல் தொடர்பாக தேசிய ஆதிதிராவிட நலத் துறை ஆணையம், தமிழக ஆதிதிராவிட நலத்துறையின் உறுப்பினர், சமூக ஆர்வலர், வழக்கறிஞர் ஆகியோரை கொண்ட குழு அமைத்து விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யவும், வடகாடு மாரியம்மன் கோயிலில் பட்டியல் சமூகத்தினர் வழிபடுவதை உறுதிப்படுத்தவும், சி.சி.டிவி. காட்சிகள் மற்றும் வீடியோ பதிவுகளைக் கொண்டு அனைத்து குற்றவாளிகளையும் கைது செய்யவும் உத்தரவிட வேண்டும்.

இதை அவசர வழக்காக எடுத்து விசாரித்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும் என்றார். பின்னர் நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் ஆகியோர் அமர்வு, மனுதாரர் கோரிக்கை தொடர்பாக மனு தாக்கல் செய்யவும், திருச்சி ஐ.ஜி., புதுக்கோட்டை ஆட்சியர், எஸ்.பி., மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் நேற்று நேரில் ஆஜராகி விளக்கமளிக்கவும் உத்தரவிட்டனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக புதுக்கோட்டையில் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா முன்னிலையில் சமாதான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் நடைபெற்றது. நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை அந்த இடத்துக்குள் இரு தரப்பினரும் செல்லக் கூடாது. பேனர் வைக்கக் கூடாது.கலவரத்தைத் தூண்டும் வகையில் சமூக வலைதளங்களில் பதிவிடக் கூடாது என முடிவெடுக்கப்பட்டது.

# போக்சோ சிறப்பு நீதிமன்றங்களுக்கு முன்னுரிமை: மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடில்லி, மே 16-

குழந்தைகளை பாலியல் தொல்லைகளில் இருந்து பாதுகாக்க போக்சோ சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட் தெரிவித்து உள்ளது.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வழக்குகள் நாடு முழுவதும் அதிகரித்து வருவது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் பெலா எம். திரிவேதி மற்றும் பி.பி. வரலே அமர்வு கூறியதாவது: போக்சோ வழக்குகளை விசாரிக்கும் அதிகாரிகள், அதன் தீவிரத்தை உணர செய்யவும், போக்சோ வழக்குகளை விசாரிப்பதற்கு என தனி நீதிமன்றங்கள் அமைப்பதற்கும் மத்திய மாநில அரசுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும். சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு உள்ள காலத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதுடன், குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணையை முடிக்க வேண்டும்.

மத்திய அரசு நிதியுதவி உடன், பல மாநிலங்கள் போக்சோ வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் அமைத்து இருந்தாலும், தமிழகம், பீஹார், உ.பி., மேற்கு வங்கம், ஒடிசா, மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், போக்சோ நீதிமன்றங்கள் தேவைப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

# உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி: ரூ.49 கோடி பரிசுத்தொகை அறிவிப்பு

## கடந்த சீசனைவிட 2 மடங்கு அதிகம்

லண்டன், மே 16-

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு ரூ.49 கோடி பரிசுத்தொகையை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இந்த தொகை கடந்த சீசனைவிட 2 மடங்கு அதிகமாம்.




**இந்தியாவுக்கு பரிசு....**

லண்டனில் நடைபெறவிருக்கும் இதன் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவும் தென்னாப்பிரிக்காவும் வரும் ஜூன் மாதம் 11-15-ம் தேதிகளில் விளையாடுகிறார்கள். பார்டர் கவாஸ்கர் தொடரில் தோல்வியுற்ற இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தேர்வாகும் வாய்ப்பை இழந்தது. இருப்பினும் 3ஆம் இடம் பிடித்ததால் இந்தியாவுக்கு ரூ.12.32 கோடி பரிசுத் தொகை கிடைத்துள்ளது. இந்தத் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு ரூ. 30.82 கோடி அறிவிக்கப்பட்டுள்ளது.

**இரண்டு மடங்கு..**

இது முந்தைய சீசனைவிட 125 சதவிகிதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு ரூ. 18.49 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த சீசனைவிட 162.5 சதவிகிதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தமாக இறுதிப் போட்டிக்கு 5.76 மில்லியன் டாலர் (ரூ. 49. 28 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த சீசனைவிடவும் இரண்டு மடங்கு அதிகம். ஐ.சி.சி. 2023 டெஸ்ட் சாம்பியன்ஷிப்பை ஆஸி. அணி வென்றது. அதை தக்க வைக்கும் முனைப்பில் கம்மின்ஸ் அணி தயாராகி வருகிறது. முதல்முறையாக கோப்பையை வெல்லும் முனைப்பில் கேப்டன் பவுமா தலைமையில் தென்னாப்பிரிக்க அணியும் தயாராகி வருகிறது.

**பரிசுத்தொகை விவரம்:**

1) வெற்றி பெற்ற அணிக்கு - ரூ. 30.78 கோடி. 2-வது இடம் பிடிக்கும் அணிக்கு - ரூ. 18.46 கோடி. 3) இந்தியா - ரூ. 12.31கோடி., 4) நியூசிலாந்து - ரூ. 10.26கோடி., 5) இங்கிலாந்து - ரூ. 8.2கோடி., 6) இலங்கை - ரூ. 7.18கோடி., 7) வங்கதேசம் - ரூ. 6.15கோடி., 8) வெஸ்ட் இண்டீஸ் - ரூ. 5.13கோடி., 9) பாகிஸ்தான் - ரூ. 4.10கோடி.

# ஆலோசகராக டிம் சௌதி நியமனம்



இந்திய அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இந்த டெஸ்ட் தொடர் வருகிற ஜூன் 20 ஆம் தேதி முதல் தொடங்குகிறது. இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் நிறைவடையும் வரை நியூசிலாந்து அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் டிம் சௌதியை, இங்கிலாந்து அணியின் சிறப்பு ஆலோசகராக அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் நேற்று (மே 15) நியமித்துள்ளது.

நியூசிலாந்து அணிக்காக அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள டிம் சௌதி, கடந்த ஆண்டு டிசம்பரில் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். இங்கிலாந்து அணி ஜிம்பாப்வேவுக்கு எதிராக அடுத்த வாரம் டெஸ்ட் போட்டி ஒன்றில் விளையாடவுள்ளது. அந்த போட்டியிலிருந்து டிம் சௌதி இங்கிலாந்து அணியுடன் இணையவுள்ளார். 36 வயதாகும் டிம் சௌதி நியூசிலாந்து அணிக்காக 107 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 391 விக்கெட்டுகளையும், 161 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 221 விக்கெட்டுகளையும், 126 டி20 போட்டிகளில் விளையாடி 164 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆர்.சி.பி.யில் வெளிநாட்டு வீரர்கள்

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் போர் பதற்றம் நிலவியது. கடந்த 8ஆம் தேதி தரம்சாலாவில் பஞ்சாப்-டெல்லி அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதால், பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் தொடர் உடனடியாக நிறுத்தப்பட்டது. வெளிநாட்டு வீரர்கள் பத்திரமாக சொந்த நாடு திரும்பினர்.

பின்னர் இந்தியா- பாகிஸ்தான் இடையில் கடந்த 10ஆம் தேதி சண்டை நிறுத்தம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து வருகிற 17ஆம் தேதி மீண்டும் ஐ.பி.எல். தொடர் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆர்.சி.பி. அணியில் இடம் பிடித்திருந்த பில் சால்ட், டிம் டேவிட், பெத்தேல் மற்றும் லிவிங்ஸ்டன் ஆகியோர் மீண்டும் அணியில் இணைந்துள்ளனர்.

## மொயீன்அலி திடீர் விலகல்

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் போர் பதற்றம் நிலவியது. கடந்த 8ஆம் தேதி தரம்சாலாவில் பஞ்சாப்-டெல்லி அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதால், பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் தொடர் உடனடியாக நிறுத்தப்பட்டது. வெளிநாட்டு வீரர்கள் பத்திரமாக சொந்த நாடு திரும்பினர். சண்டை நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வருகிற 17ஆம் தேதி மீண்டும் ஐ.பி.எல். தொடர் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாட்டு வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்காக இந்தியா திரும்பி வருகிறார்கள். இந்நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வரும் மொயீன் அலி, சொந்த காரணத்திற்காக எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே டெல்லி அணியின் மெக்கர்க் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகியுள்ளார்.

# கோடை விழா: ஏற்காட்டிற்கு இன்று முதல் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சேலம், மே 16-

கோடை விழாவை முன்னிட்டு ஏற்காட்டிற்கு இன்று முதல் கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்கப்படவுள்ளன.

ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காட்டில் வருகிற 23-ந் தேதி கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி தொடங்குகிறது. எனவே, சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஏற்காடு மலைப்பகுதியில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களை கண்டுகளிக்கும் வகையில் அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில சேலத்தில் இருந்து ஏற்காட்டிற்கு சிறப்பு பேக்கேஜ் பஸ் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த பஸ்சுக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால் கூடுதலாக மற்றொரு பஸ் இயக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. இதனை தொடர்ந்து சேலம் புதிய பஸ் நிலையத்தில் இருந்து நாளை (வெள்ளிக்கிழமை) காலை 8 மணிக்கு இயக்கப்பட உள்ளது. இந்த சிறப்பு பஸ்கள் கோடை காலம் முடியும் வரை தினமும் காலை 8 மணி மற்றும் 8.30 மணிக்கு புதிய பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும்.

இந்த பேக்கேஜ் சிறப்பு பஸ்கள் ஏற்காட்டில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்களான கரடியூர் காட்சி முனை, சேர்வராயன் கோவில், மஞ்சக்குட்டை காட்சி முனை, பக்கோடா பாயிண்ட், லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட், ரோஸ் கார்டன், ஏற்காடு ஏரி, அண்ணா பூங்கா, மான் பூங்கா, தாவரவியல் தோட்டம் ஆகிய 11 இடங்களை கண்டு களித்துவிட்டு மீண்டும் சேலம் புதிய பஸ் நிலையத்திற்கு இரவு 7 மணிக்கு பேக்கேஜ் பஸ் நிறைவு செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பஸ்சில் பயணம் செய்வதற்கு ஒரு பயணிக்கு ரூ.300-ம், சிறுவர்களுக்கு அரை கட்டணமாக ரூ.150-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பஸ்களில் பயணம் செய்வதற்கு அரசு விரைவு போக்குவரத்துக்கழக முன்பதிவு மையத்திலும், www.tnstc.in என்ற இணையதளத்திலும் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

எனவே, கோடை விழாவை முன்னிட்டு சேலத்தில் இருந்து ஏற்காட்டிற்கு சிறப்பு பேக்கேஜ் பஸ்கள் இயக்கப்பட உள்ளதால் பயணிகள் அனைவரும் கூட்ட நெரிசலை தவிர்த்து பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளலாம் என்று சேலம் அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குனர் ஜோசப் டயஸ் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். அணிகள் மாற்று வீரர்களை ஒப்பந்தம் செய்ய பி.சி.சி.ஐ. அனுமதி

மும்பை, மே 16-

வெளிநாட்டு வீரர்கள் இல்லாத நிலையில் ஐ.பி.எல். அணிகள் தற்காலிக மாற்று வீரர்களை ஒப்பந்தம் செய்து கொள்ள பி.சி.சி.ஐ. அனுமதி வழங்கியுள்ளது.

**மீண்டும் ஐ.பி.எல்...**

18-வது ஐ.பி.எல். தொடர் இந்தியா- பாகிஸ்தான் நாடுகள் இடையே போர் பதற்றம் அதிகரித்ததால் ஒரு வாரம் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையடுத்து போர் பதற்றம் தணிந்ததை தொடர்ந்து ஐ.பி.எல். போட்டி வருகிற 17-ந்தேதி மீண்டும் தொடங்கும் என இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்தது.

**பி.சி.சி.ஐ. புதிய முடிவு...**

இந்நிலையில் ஐ.பி.எல். 2025 மீண்டும் தொடங்குவதற்கு முன்பு பி.சி.சி.ஐ. புதிய முடிவை எடுத்துள்ளது. இப்போது வெளிநாட்டு வீரர்கள் இல்லாத நிலையில் அணிகள் தற்காலிக மாற்று வீரர்களை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனால் தற்போது தேர்வுசெய்யும் வீரர்களை அடுத்த ஏலத்திற்கு முன்பு தக்கவைக்க முடியாது என்று பி.சி.சி.ஐ. தரப்பில் தெரி விக் கப் பட் டுள் ளது. மேலும் இத்தொடர் முடியும் வரை தற்காலிக மாற்று வீரர்களை அணிகள் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்றும் கூறிவுள்ளது.

**தக்க வைக்க முடியும்...**

அதேசமயம் இத்தொடர் இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர் தேர்வு செய்யப்பட்ட லுவான்-ட்ரே பிரிட்டோரியஸ், நந்த்ரே பர்கர், மயங்க் அகர்வால் மற்றும் செதிகுல்லா அடல் ஆகியோரை அணிகள் அடுத்த சீசனுக்கு தக்க வைக்க முடியும் என்பதையும் பி.சி.சி.ஐ. தெளிவுபடுத்தியுள்ளது. முன்னதாக நேற்று டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி, ஃபிரேசர் மெக்குர்க் தொடரிலிருந்து விலகியதை அடுத்து டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி முஸ்தஃபிசூர் ரஹ்மானை ஒப்பந்தம் செய்தது குறிப்பிடத்தக்கது.

# அசையாமல் நின்ற பெயர்ஸ்டோ

இங்கிலாந்து வீரர் ஜானி பெயர்ஸ்டோ 10 நொடிகள் அசையாமல் நின்ற விடியோ வைரலாகி வருகிறது. 35 வயதாகும் ஜானி பெயர்ஸ்டோ தற்போது கவுண்டி சாம்பியன்ஷிப் டிவிஷன் 1-இல் விளையாடி வருகிறார். இந்தத் தொடரில் யார்க்ஷ்ரி அணிக்காக கேப்டன் பொறுப்பிலிருக்கும் ஜானி பெயர்ஸ்டோ ஒரு பந்தினை அடித்துவிட்டு அசையாமல் 9.51 நொடிகள் நிற்பார். இரண்டு பந்துகளுக்கு தொடர்ச்சியாக இப்படி நிற்கும் விடியோ காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதனை ரோட்ஸே கவுண்டி சாம்பியன்ஷிப் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

முன்னதாக ஆஸி. உடனான டெஸ்ட் போட்டியில் பேட்டிங் செய்துவிட்டு கிரிஸில் காலை வைத்துவிட்டு நடந்து சென்றார். கீப்பர் பந்தினை பிடித்து ஸ்டம்பில் அடித்ததும் நடுவர் அவுட் கொடுத்தார். இது மிகப்பெரிய சர்ச்சையானது. விதியின் படி அது அவுட்டாக இருந்தாலும் பலரும் இதைக் கடுமையாக விமர்சித்தார்கள். ஜானி பெயர்ஸ்டோ இதனை ஒரு பாடமாக எடுத்து கொண்டு இப்படி செய்து வருகிறார். கிரிக்கெட் ரசிகர்கள் சமூகவலைதளத்தில் மீம்ஸ்களாக குவித்து வருகிறார்கள்.

கண் தானம் செய்வீர்

# கைதானோர் மட்டும் வழுக்கி விழுவது எப்படி? சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி

சென்னை, மே 16-

வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு கைதானோர் மட்டும் வழுக்கி விழும் நிலையில் போலீஸ் ஸ்டேஷன் கழிவறைகள் உள்ளனவா என சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

வழக்கு ஒன்றில் கைதாகி புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ள காஞ்சிபுரத்தை சேர்ந்த ஜாகிர் உசேன் என்பவருக்கு கைகால் முறிவு ஏற்பட்டதால் சிகிச்சை அளிக்க உத்தரவிடும்படி அவரது தந்தை இப்ராஹிம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு நீதிபதிகள் ஜிஆர் சுவாமிநாதன் மற்றும் லட்சுமிநாராயணன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்த போது, மனுதாரரின் மகனுக்கு காயம் ஏற்பட்டது எப்படி என கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், கழிப்பறையில் வழுக்கி விழுந்ததால் காயம் ஏற்பட்டதாகவும், சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து குறுக்கிட்ட நீதிபதிகள், போலீஸ் ஸ்டேசன் கழிவறைகளில், குற்றம்சாட்டப்பட்டு கைதானோர் மட்டும் வழுக்கி விழுந்து காயம் ஏற்படும் வகையில் உள்ளதா? அந்த கழிப்பறையை போலீசார் பயன்படுத்தவில்லையா ?அவர்களுக்கு ஏதும் ஆகவில்லை என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு கட்டுப்போடும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்த விவகாரத்தில் ஏதேனும் ஒரு நாள் சம்பந்தப்பட்ட போலீஸ் பணியை இழக்க நேரிடும் எனக்கூறியதுடன், மனுதாரரின் மகனுக்கு சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க உத்தரவிட்டு விசாரணையை முடித்து வைத்தனர்.

# பாகிஸ்தானுக்கு உளவு தகவல்களை பகிர்ந்தவர் அரியானாவில் கைது

சண்டிகர், மே 16-

பாகிஸ்தானின் உளவு அமைப்புக்கு முக்கிய தகவல்களை பகிர்ந்து கொண்டதற்காக அரியானாவின் பானிபட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தானில் உள்ள உளவு அமைப்புகள் மற்றும் சில நபர்களுடன் முக்கியமான தகவல்களைப் பகிர்ந்து கொண்டதற்கு, அரியானா மாநிலம், பானிபட் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை அரியானா போலீசார் கைது செய்தனர். அவரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர்.

24 வயதான நௌமன் இலாஹி உத்தரபிரதேசம் மாநிலத்தை சேர்ந்தவர். இவர், தனியார் நிறுவனத்தில் பாதுகாவலராகப் பணியாற்றி வருகிறார் என்பது விசாரணையில் தெரியவந்தது. அவரிடம் உள்ள மொபைல்போனில் போலீசார் ஆய்வு செய்தனர். அதில், முக்கிய தகவல்களை பகிர்ந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், நௌமன் இலாஹி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

கடந்த மாதம் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட பதட்டத்தை தொடர்ந்து அரியானா மாநில போலீசார் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும் நேரத்தில் இல்லாஹியின் கைது நடந்துள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக மு.க.ஸ்டாலின் செயல்படுகிறார்

## அமைச்சர் அர.சக்கரபாணி பெருமிதம்



**ஒட்டன்சத்திரம், மே 16-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், மற்றும் தொப்பம் பட்டி ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட ஊரக பகுதிகளில் 2025-2026 ஆண்டு கலைஞ ரின் கனவு இல்லம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுபார்த் தல் உள்ளிட்ட சுமார் 12 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட பயனா ளிகளுக்கு சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கூட் டுறவு சங்கம் கடன் உதவி கள், மற்றும் பழுதடைந்த வீடுகள் சரி செய்வதற்கான ஆணைகள், மற்றும் கலை ஞர் கனவு இல்லம் திட்டத் தின் மூலம் புதிய வீடு கட்டு வதற்கான ஆணைகளை வழங்கி உணவு மற்றும் உண வுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கர பாணி பேசுகையில், தமிழ கத்தை குடிசையில்லா மாநி லமாக மாற்றுவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கனவு இல்ல திட் டத்தினை தொடங்கி வைத் துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத் தில் இதுவரை பத்தாயிரம் கலைஞர் கனவு இல்லம் கட் டுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து துறை அதிகா ரிகளும் கலைஞர் கனவு இல் லம் கட்டும் பணியில் தொய் வுகள் ஏற்படாதவாறு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து குறைகளை கலைய நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

திராவிட மாடல் ஆட்சி யில் ஜாதி மதம், இனம் கட்சி என்ற எந்த வேறுபாடும் இன்றி அனைவருக்கும் சம மாக திட்டங்கள் செயல் பட்டு வருவதாகவும், வாக்க ளிக்காதவர்களும் வருத்தப்ப டும் அளவிற்கு திராவிடம் ஆடல் ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வராக முதலமைச்சர் . செயல்படுகிறார் என பேசி னார்.

மேலும் விழாவில் மாவட்ட ஆட்சியர் சரவ ணன், திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இணைப்பதி வாளர் சுபாஷினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திலகவதி, கோட்டாட்சியர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் கள் காமராஜ், வடிவேல்முரு கன், பிரபுபாண்டியன், தாஹி ரா, வட்டாட்சியர் சஞ்சீவ் காந்தி, கிராம நிர்வாக அலு வலர் பாபு, உதவியாளர்கள் விஜயபாஸ்கரன், பைசல் முகமது, ஒன்றிய செயலாளர் கள் ஜோதீஸ்வரன், தர்மராஜ், பொன்ராஜ், பாலு, சுப்பிரம ணி, பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கிருஷ்ணசாமி, முன்னாள் ஒன்றிய பெருந்த லைவர்கள் அய்யம்மாள், சத் திய புவனா, ஒன்றிய துணைச் செயலாளர்கள் முரு கானந்தம், சிவக்குமார், சிவ பாக்கியம் ராமசாமி, ராமகி ருஷ்ணன் உள்ளிட்ட வரு வாய்த் துறையினர், ஊரக வளர்ச்சி துறையினர், முன் னாள் உள்ளாட்சி பிரதிநிதி கள கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முதல்வரின் நான் முதல்வன் கல்லூரி கனவு திட்டம்

## மாணவர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்



**ராமநாதபுரம், மே 16-**

தமிழக முதல்வரின் நான் முதல்வன் கல்லூரி கனவு திட்டத்தின் கீழ் ராமநாதபு ரம் கல்லூரியில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார். தமிழ்நாடு துணை முதலமைச்சர் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரிக்கனவு - 2025 உயர் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி யினை காணொளிக் காட்சி யின் மூலம் துவக்கி வைத்த தையொட்டி, ராமநாதபுரம் செய்யதம்மாள் பொறியியல் கல்லூரியில் மாவட்ட கலெக் டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மாணவ, மாணவிகளுடன் பங்கேற்றார். நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் மத்தி யில் கலெக்டர் பேசியதா வது:-

தமிழ்நாடு அரசால் பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு விழிப்புணர்வு வழி காட்டுதல்களை அளிப்ப தற்கு நான் முதல்வன் - கல் லூரிக் கனவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகி றது. குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி, வேலைவாய்ப்பு விழிப்பு ணர்வு மற்றும் வழிகாட்டு தல்களையும் அளிப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். அந்த வகையில் ராம நாதபுரம் கல்வி மாவட்டத் தில், 14.05.2025 இன்றும், பர மக்குடி கல்வி மாவட்டத்தில் 16.05.2025 அன்றும், நான் முதல்வன் - கல்லூரிக் கன வுத் திட்டத்தின்கீழ் உயர்வுக் குப் படி உயர்கல்வி வழி காட்டல் முகாம் நடைபெறு கிறது.

ராமநாதபுரம் மாவட்டம், பள்ளிக் கல்வித் துறை சார் பாக 2024-2025 ஆம் கல்வி யாண்டில் 12-ஆம் வகுப்பு முடித்த சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்கள், நலத்துறை பள்ளி மாணவர் கள், ஒற்றைப் பெற்றோரு டைய மாணவர்கள், பள்ளி இடைநிற்றல் ஏற்பட வாய்ப் புள்ள மாணவர்கள், அரை யாண்டுத் தேர்வில் தோல்வி யடைந்த மாணவர்கள், 50 சத வீதம் குறைவாக வருகைபு ரிந்த மாணவர்கள் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் உள்ளிட்ட 1712 மாணவர்க ளுக்கு கல்லூரிக் கனவு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் உயர்கல்வி யில் சேராத 12-ம் வகுப்பு தேர்ச்சியடைந்த மற்றும் தேர்ச்சி பெறாத மாணவர்க ளுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் வழங்கப்படும் குறுகிய கால திறன் பயிற்சி, கல்லூரிக் கனவு சிற்றேடுகள், சமூக நலத்துறையால் செயல்படுத் தப்படும் உதவித்தொகை திட்டங்கள், சான்றிதழ்கள், இட ஒதுக்கீடு, மாணவர்க ளுக்கான இலவச விடுதி வச திகள் போன்ற தகவல்களும், ஆலோசனைகளும் வழங்கப் படுகிறது.

மேலும் அரசு கலை மற் றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிக்கு விண்ணப்பித்தல் உடனடி சேர்க்கை, கல்விக்கடன் உத வித்தொகை சாதிச்சான்று, இருப்பிடச்சான்று, வருமா னச்சான்று போன்ற வரு வாய்த்துறை மூலம் வழங்கப் படும் சான்றிதழ்கள் மற்றும் விடுதியில் தங்கிப்படித்தல் போன்ற சேவைகள் குறித்த தகவல்களை மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகை யில் அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளது. அனைத்து அர சுத் துறைகளையும் ஒருங்கி ணைத்து முகாம் நடை பெற்று வருகிறது. கல்லூரி யில் சேர்வதற்கான அனைத்து உதவிகள், ஆலோ சனைகள் வழங்கப்படும். அனைவரும் கட்டாயம் கல் லூரி படிப்பில் சேர வேண் டும்.

அதற்காக இம்முகா மினை மாணவ, மாணவியர் கள் முழுமையாக பயன்ப டுத்திக்கொண்டு உயர்கல்வி தொடர்வதற்கான ஆலோச னைகளை பெற்று, உங்க ளுக்கு பிடித்த உயர்கல்வி கற்று உங்களது வாழ்வின் பொன்னான காலமான கல் லூரி கல்வியை பெற்று வாழ் வினை வளமாக்க வாழ்த்துகி றேன். இவ்வாறு கூறினார். அதனைத்தொடர்ந்து மாண வ, மாணவிகளுக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு கையேடு களை கலெக்டர் வழங்கி னார். தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல் லூரி, பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி நிலையம் சார்பில் அமைக்கப்பட்டி ருந்த அரங்குகளை பார்வை யிட்டதுடன் மாணவ, மாண விகள் தாங்கள் விரும்பும் பாடப்பிரிவு தொடர்பாக விண்ணப்பத்தினை பதிவு செய்திடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அரங் குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் ராஜமனோ கரன், துணை ஆட்சியர் (ப யிற்சி) ப.கோகுல்சிங், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சின்னராசு, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) பிரின்ஸ் ஆரோக்கியராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே அய்யனார் சுவாமி புரவி எடுப்பு திருவிழா



**நத்தம், மே 16-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே வேலாயுதம்பட்டி யில் அய்யனார், வல்லடியார் சுவாமிகளின் புரவி எடுப்பு திரு விழா நடந்தது.இதையொட்டி செவ்வாய்கிழமை மாலை ஊர் மந்தையில் செய்யப்பட்ட சுவாமி சிலைகள் கோவில் முன்பு கண் திறக்கப்பட்டது. பின்னர் கோவிலுக்குள் சென்ற சுவாமி களுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந் தது. தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை அய்யனார், வல் லடியார் மதிலை, குதிரை சிலைகள் வாணவேடிக்கைகள், வர் ணக் குடைகளுடன் ஊர்வலமாக இருப்பிடம் போய் சேர்ந் தது. இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர் கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

# ஸ்ரீவில்லிபுத்தூரில் இந்து முன்னணி சார்பில் வேல் பூஜை: ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



**விருதுநகர்,மே.16-**

மதுரையில் வரும் ஜூன் மாதம் 22-ம் தேதி மாநிலம் தழுவிய முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு இந்த மாநாடு சிறப்பாக நடைபெற வும் மாநாட்டில் கலந்து கொள்ளும் பக்தர்கள் வாழ்வு சீரும் சிறப்புமாக அமைந்திட வும் ஸ்ரீவில்லிபுத்தூரில் இந்து முன்னணி சார்பில் முருகப் பெருமான் வேலுக்கு வேல் பூஜையும் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சியும் ஒரு தனியார் மண்டபத்தில் வைத்து சிறப் பாக நடைபெற்றது. நிகழ்ச்சி யில் இந்து முன்னணி மாநில இணை அமைப்பாளர் கே. பொன்னையா இந்து முன் னணி மாவட்ட தலைவர் யுவ ராஜ் மாவட்ட பொருளாளர் வினோத்குமரன் மாவட்ட பொறுப்பாளர் பாண்டியராஜ் நகர் செயலாளர் முருகன், பாரதி ஜனதா கட்சி மாவட்ட தலைவர் சரவண துரை என்ற ராஜா மாநில துணை அமைப் பாளர் சோலையப்பன் மற் றும் துறவிகளும் ஏராளமான பெண் பக்தர்களும் கலந்து கொண்டு வேலுக்கு பால் அபிஷேகம் செய்து வழிபாடு நடத்தினார். நிகழ்ச்சியில் மு ருகன் பக்தி பாடல்கள் பாடப் பட்டது. முடிவில் அனைவ ருக்கும் பிரசாதம் வழங்கப் பட்டது. இதற்கான ஏற்பாடு களை ஸ்ரீவில்லிபுத்தூர் இந்து முன்னணி நிர்வாகிகள் சிறப் பாக செய்திருந்தனர்.

# நத்தம் அருகே முத்துமாரியம்மன் கோவில் திருவிழா



**நத்தம், மே 16-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூர் ஊராட்சி எரம்பட்டியில் முத்துமாரியம்மன் கோவில் திருவிழா நடந் தது. இதையொட்டி கடந்த மாதம் 28-ம் தேதி காப்பு கட்டுத லுடன் விழா தொடங்கியது. இதில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து நேற்று காலை அம்மன் நகர்வலம் வரும் நிகழ்ச் சியும், பின்னர் பால்குடம் எடுத்தல், கிடாய் வெட்டுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச் சியான பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் மாலை நடந்தது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பூக்குழி இறங்கி தங்க ளது நேர்த்திக் கடன்களை செலுத்தினர். இதில் சுற்று வட்டா ரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரி சனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை எரம்பட்டி ஊர் பொதுமக்கள், முக்கியஸ்தர்கள் செய்திருந்தனர்.

# பார்த்திபனூர் ஜாமி ஆ மஸ்ஜித்தின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தேடுக்கப்பட்டனர்



**பரமக்குடி, மே 16-**

இராமநாதபுரம் மாவட் டம், பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் ஜாமிஆ மஸ் ஜித்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. பார்த்திப னூர் ஜாமிஆ மஸ்ஜித்தின் 2025-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்வு நடை பெற்றது. அதன் தலைவராக ரஹ்மத்துல்லாஹ், செயலாள ராக சேக் அப்துல் காதர், பொருளாளராக செய்யதலி சேட், துணைத் தலைவர் சாகுல் ஹமீது, துணைச் செய லாளராக அபு சலீம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் தேர்வு குழு உறுப்பினர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டு பொறுப்பேற் றுக் கொண்டனர். தேர்ந்தெ டுக்கப்பட்ட புதிய நிர்வாகி களுக்கு உறுப்பினர்கள் மற் றும் ஜமாத்தார்கள் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

# திருச்சுழி அரசு கலை கல்லூரியில் கலையரங்கம் கட்டும் பணிகள்

## அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார்



**விருதுநகர், மே 16-**

திருச்சுழி ஊராட்சி ஒன்றி யம், விடத்தகுளம் கிராமத் தில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல் லூரியில் ஊரக வளர்ச்சி மற் றும் ஊராட்சித்துறை சார் பாக ரூ.1 கோடி மதிப்பில் கலையரங்கம் கட்டும் பணி களுக்கு மாவட்ட ஆட்சித்த லைவர் ஜெயசீலன் தலை மையில், அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத் தார். பின்னர் அமைச்சர் தெரி வித்ததாவது:-

கலையரங்கம் என்று சொன்னால் கலை நிகழ்ச்சி நடத்துவதற்கான ஒரு இடம் மட்டும் கிடையாது. அதன் வாயிலாக பல அறிஞர் பெரு மக்கள் உங்களுடன் கலந்து ரையாடலாம். பல பாட சம் பந்தமாகவும்,

பாடத்திற்கு வெளியே இருக்கக்கூடிய முக்கியமான நிகழ்வுகள் குறித்தும், நீங்கள் அறிந்து கொள்ளக்கூடிய வகையிலும், பல வகையி லும் பல்வேறு வாய்ப்பு களை நீங்கள் பெற்று பயன் பெறக் கூடிய வகையில் பல் நோக்கு மையமாக உருவாக இருக்கிறது. நமது பகுதி ஒரு கிராமப்புற பகுதியாக இருந் தது.

2011-ஆம் ஆண்டுகளில் நான் கல்வித்துறை அமைச்ச ராக இருக்கின்ற பொழுது நம்முடைய தொகுதியில் அதிகமான பள்ளிக்கூடங் களை உருவாக்கினோம். ஆனால் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் பெண் குழந்தைகளுக்காக தான் இங்கே ஒரு கல்லூரி அமைய வேண்டும் என்பதற் முதல மைச்சர் உத்தரவின்படி 2021 - ஆம் ஆண்டில் தமிழ்நாட் டில் துவங்கப்பட்ட முதல் கல்லூரி நமது திருச்சுழி கல் லூரி தான்.

நீங்கள் எல்லோரும் இந்த கல்லூரியில் படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண் டும். நீங்கள் அனைவரும் மேன்மேலும் உயர்ந்து சிறக்க வேண்டும் என்பதற் காக தான் முதலமைச்சர் அவர்கள் புதுமைப்பெண் திட்டம், தமிழ்புதல்வன் திட் டம் மூலம் உங்களுக்கு மாதம் ரூ.1000-/- வழங்கப் பட்டு அனைவரும் கல்லூரி யில் சேர்ந்து படிக்க வேண் டும் என்பதற்காக தான். கல் லூரி படிப்பு என்பது இந்த கல்லூரியோடு நின்று விடா மல் மேன்மேலும் படித்து ஆராய்ச்சி மாணவர்களாக, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உயர் அதிகாரியாக நீங்கள் அனைவரும் உருவாக வேண்டும் என மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன் னாள் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள் பொன் னுத்தம்பி, காளீஸ்வரி சமய வேலு , முக்கிய பிரமுகர்கள், கல்லூரி முதல்வர், பேராசிரி யர்கள், மாணவர்கள், உள் ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஜோகிப்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.**

# திருமங்கலம் பகுதி மக்களுக்கு பாம்புக்கடி குறித்து விழிப்புணர்வு



**திருமங்கலம், மே 16-**

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் பாம்புக்கடியால் சுமார் 60 ஆயிரம் மக்கள் உயிர் இழக்கின்றனர். இதில் பெரும்பாலும் பாதிக்கப்படு வது கிராமப் பகுதி மக்கள். இதனிடையே பாம்புக்கடி ஒரு அறிவிக்ககூடிய நோயாக தமிழ்நாடு அரசு அரசா ணையை பிறப்பித்துள் ளது.இதனை கருத்தில் கொண்டு மதுரை மாவட்டத் திலுள்ள மக்களிடத்தில் பாம் புகள் குறித்த விழிப்புணர் வும் அவர்களது புரிதலும் குறித்த மதிப்பாய்வினை அறிந்து கொள்ளவும், மக்களி டத்தில் விழிப்புணர்வு ஏற்ப டுத்த முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது. அதன் படி மதுரை டோக் பெரு மாட்டி கல்லூரி மற்றும் திருச்செங்கோடு விவேகா னந்தா கல்லூரி மாணவிகள் திருமங்கலம் ஊராட்சி ஒன்றி யத்தில் உள்ள 156 கிராமங்க ளுக்கும் நேரடி பயணம் மேற்கொண்டு பாம்புக்கடி குறித்த விழிப்புணர்வு மற் றும் தகவல் சேகரிக்கும் பணி யினை துவங்கி உள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வு நேற்று காலை திருமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவல கம் அரங்கத்தில் ஊரக வட் டார வளர்ச்சி அலுவலர்கள் கீதா மற்றும் சந்திரகலா ஆகி யோரது தலைமையில் நடை பெற்றது. இதில் செஞ்சி லுவை சங்கம் ராஜ்குமார், அன்ன வயல் காளிமுத்து, செல்வி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ் பாபு, ராஜேஸ்வரி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வினில் மதுரை இயற்கை பண் பாட்டு அறக்கட்டளை மற் றும் இறகுகள் அறக்கட் டளை உறுப்பினர்கள் ஊர்வ னம் விஸ்வா மற்றும் கார்த்தி கேயன், ஹோமியோபதி டாக்டர் தமிழன் ஆகியோர் ஊராட்சி ஒன்றிய அலுவலக பணியாளர்களிடத்தில் பா ம்பு கடி முதலுதவி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி னர். இதில் டோக் பெருமா ட்டி கல்லூரி மாணவிகள் மற் றும் மதுரை இயற்கை பண் பாட்டு அறக்கட்டளை தன் னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, அங்கு மலர்களால் வடிவமைக்கப்பட்ட சிம்மாசனத்தில் அமர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா ராமச்சந்திரன், ஆ.ராசா எம்.பி., கணேஷ் எம்.எல்.ஏ., மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் நான்காண்டு சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பள்ளத்திவிடுதி கிராமத்தில் சூறைக்காற்றால் சேதமடைந்துள்ள வாழை மரங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று அண்ணாநகர் மண்டலம், திருநகர் பூங்காவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.90 லட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட உள்ள மகளிர் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையத்திற்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, வெற்றி அழகன் எம்.எல்.ஏ, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குளுமையை மிஞ்சிய உதகை மக்களின் இனிமை: முதல்வர் ஸ்டாலின் நெகிழ்ச்சி

**நீலகிரி, மே 16-**

உதகையின் குளுமையை அம்மக்களின் இனிமை மிஞ்சியது என முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோடைவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான 127-வது மலர் கண்காட்சி ஊட்டி அரசினர் தாவரவியல் பூங்காவில் நேற்று தொடங்கியது. கண்காட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். பின்னர் அவர் அங்கு பல வண்ண மலர்களை கொண்டு வடிவமைக்கப்பட்டு இருந்த பொன்னியின் செல்வன் அரண்மனை, கரிகாலன் கல்லணை உள்ளிட்டவற்றை பார்வையிட்டார்.

இந்நிலையில், இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:- "பெரும்புலவர் கபிலர் குறிஞ்சிப்பாட்டில் பாடிய மலர்களை, மலர்மாரி பொழிகின்றேன் என முத்தமிழறிஞர் கலைஞர் சங்கத்தமிழில் சொல்லியது சிந்தையில் தோன்ற, உதகை 127-ஆவது மலர்க்காட்சியைத் தொடங்கி வைத்தேன். உதகையின் குளுமையை அம்மக்களின் இனிமை மிஞ்சியது!"

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 10, 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியாகிறது

## அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவிப்பு

**சென்னை, மே 16-**

தமிழகத்தில் 10 மற்றும் 11 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்று (மே 16) வெளியிடப்படும் என அமைச்சர் அன்பில் மகேஸ் தகவல் தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு 10 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளும் பிற்பகல் 2 மணிக்கு 11 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளும் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தேர்வு முடிவுகளை வெளியிடுகிறார். பள்ளிக்கல்வித் துறையின் அதிகாரபூர்வ இணையதளங்களான https://results.digilocker.gov.in, www.tnresults.nic.in ஆகியவற்றில் மாணவர்கள் முடிவுகளைக் காணலாம்.

தேர்வர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளங்களில் தங்களது பதிவெண், பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். மேலும், பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதி மொழிப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணிற்கும் தனித்தேர்வர்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைப்பேசி எண்ணிற்கும் குறுஞ்செய்தி வழியாகவும் தேர்வு முடிவுகள் அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 தேர்வு முடிவுகளும் முன்கூட்டியே கடந்த மே 8 ஆம் தேதி வெளியானது குறிப்பிடத்தக்கது.

## மதுரை சித்திரை திருவிழா நிறைவு:

# அழகர் மலைக்கு புறப்பட்டார் கள்ளழகர்

**மதுரை, மே 16-**

கருப்பணசாமி கோவில் சன்னதியில் இருந்து கள்ளழகர் பூப்பல்லக்கில் அழகர் மலைக்கு புறப்பட்டார்.

மதுரை சித்திரை திருவிழா சைவ, வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக நடந்து வருகிறது. சிகர நிகழ்ச்சியாக கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் 12-ந்தேதி நடந்தது. அன்று இரவு வண்டியூர் வீரராகவ பெருமாள் கோவிலுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து கருட வாகனத்தில் புறப்பாடாகி தேனூர் மண்டபத்தில் மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளித்தார். ராமராயர் மண்டபத்துக்கு இரவு 12.30 மணிக்கு வந்தார். அப்போது அங்கு ஏராளமான பக்தர்கள் கூடி கள்ளழகரை வரவேற்றனர்.

நள்ளிரவு 2 மணிக்கு மேல் தசாவதார திருக்கோலங்களில் காட்சி தொடங்கியது. முதலில் முத்தங்கி சேவையும் அதை தொடர்ந்து மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரங்களில் காட்சி தந்தார். இறுதியாக நேற்று காலை 8.30 மணிக்குமேல் மோகினி அவதாரத்தில் கள்ளழகர் காட்சி தந்தார். விடிய, விடிய தசாவதார திருக்காட்சி நடந்தது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசித்தனர்.

நேற்று முன்தினம் காலையில் மோகினி அவதாரத்தில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பிற்பகலில் ராமராயர் மண்டபத்தில் அனந்தராயர் பல்லக்கில் ராஜாங்க திருக்கோலத்தில் எழுந்தருளி அங்கிருந்து புறப்பட்டார். தொடர்ந்து கோரிப்பாளையம் வழியாக இரவு 11 மணிக்குமேல் தல்லாகுளத்தில் உள்ள ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தை அடைந்தார். அங்கு திருமஞ்சனமாகி நேற்று அதிகாலை 3 மணிக்கு கள்ளர் திருக்கோலத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளி அருள்புரிந்தார்.

இதையடுத்து அதே திருக்கோலத்துடன் கருப்பணசாமி கோவில் சன்னதியில் இருந்து பூப்பல்லக்கில் அழகர் மலைக்கு புறப்பட்டார். அங்கு திரண்டு வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா...கோஷத்துடன் கள்ளழகரை தரிசனம் செய்தனர். தொடர்ந்து கள்ளழகர் மூன்றுமாவடி, அப்பன் திருப்பதி, கள்ளந்திரி வழியாக நாளை காலை அழகர் மலைக்கு போய் சேருகிறார்.

# குரூப் 2 முதன்மைத் தேர்வு முடிவுகள் வெளியீடு

**சென்னை, மே 16-**

குரூப் 2 முதன்மைத் தேர்வு முடிவுகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) வெளியிட்டுள்ளது.

தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளர், வணிகவரித் துறை துணை அலுவலர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், சார் பதிவாளர் ஆகிய பதவியிடங்கள் குரூப் 2 பிரிவின் கீழ் வருகின்றன. இதேபோன்று, கூட்டுறவுத் துறையில் முதுநிலை ஆய்வாளர், இந்து சமய அறநிலையத் துறையில் தணிக்கை ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கையில் உதவி ஆய்வாளர், அமைச்சுப் பணியாளர்களில் உதவியாளர்கள், இளநிலை கணக்காளர் போன்ற பணியிடங்கள் குரூப் 2-ஏ பிரிவின் கீழ் வருகின்றன. இரண்டு பிரிவுகளிலும் காலியாக உள்ள பணியிடங்களுக்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, குரூப் 2 பிரிவில் 534 காலியிடங்களுக்கும், 2-ஏ பிரிவில் 2,006 இடங்களுக்கும் கடந்த ஆண்டு செப்டம்பரில் முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட்டது. இந்தத் தேர்வை 5 லட்சத்து 80 ஆயிரம் பேர் எழுதினர்.

குரூப் 2, 2-ஏ தேர்வுகள் முதல்நிலை, முதன்மைத் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டது என்பதால், கொள்குறி வகை அடிப்படையிலான முதன்மைத் தேர்வு முதல்தாள் தேர்வு கடந்த பிப். 8-ஆம் தேதி நடைபெற்றது. முதன்மைத் தேர்வின் இரண்டாவது தாளுக்கான தேர்வு பிப். 23-ல் நடைபெற்றது. இந்த நிலையில், குரூப் 2 முதன்மைத் தேர்வுகளுக்கான முடிவுகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) வெளியிட்டுள்ளது.

தேர்வு முடிவுகளை www.tnpsc.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுப்ரீம் கோர்ட்டிற்கு சவால் விடும்... (1-ம் பக்க தொடர்ச்சி)

ஆட்சேபனையும் இருக்க வேண்டும்? மசோதா ஒப்புதலில் காலவரையற்ற தாமதங்களை அனுமதிப்பதன் மூலம் பா.ஜ.க. தனது கவர்னர்களின் தடையை சட்டப்பூர்வமாக்க முயற்சிக்கிறதா? பா.ஜ.க. அல்லாத மாநில சட்டமன்றங்களை முடக்க மத்திய அரசு விரும்புகிறதா?

**தீய நோக்கத்தை...**

நமது நாடு ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. இந்தக்குறிப்பில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகள், அரசியலமைப்பின் அடிப்படை அதிகாரப்பகிர்வை சிதைத்து, எதிர்க்கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் மாநில சட்டமன்றங்களை செயலிழக்கச் செய்யும் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசின் தீய நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

எனவே, இது மாநில சுயாட்சிக்கு ஒரு தெளிவான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இந்த மோசமான சூழ்நிலையில், அரசியலமைப்பைப் பாதுகாக்க இந்த சட்டப் போராட்டத்தில் இணையுமாறு அனைத்து பா.ஜ.க. அல்லாத மாநிலங்களையும் கட்சித் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் போரில் நாம் நமது முழு பலத்துடன் போராடுவோம். தமிழ்நாடு போராடும்- தமிழ்நாடு வெற்றி பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

**ஜனாதிபதி கடிதம்...**

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வழங்கப்பட்ட சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை முன்வைத்து, ஜனாதிபதி திரௌபதி முர்மு சுப்ரீம் கோர்ட்டுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் கவர்னர்களுக்கு, ஜனாதிபதிக்கு காலக்கெடு விதிக்க முடியுமா உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை அவர் கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சுப்ரீம் கோர்ட்டிடம் கேள்வி... (1-ம் பக்க தொடர்ச்சி)

ஒரு கவர்னரின் நடவடிக்கைகள் தொடர்பாக நீதித்துறை மறுஆய்வுக்கு, பிரிவு 361 முழுமையான தடையை விதிக்கிறதா?

5. அரசியலமைப்பு ரீதியாக காலக்கெடு இல்லாவிட்டாலும், சட்டப்பிரிவு 200-இன் கீழ் உள்ள அனைத்து அதிகாரங்களையும் கவர்னர் பயன்படுத்துவதற்காக, நீதிமன்றங்கள் காலக்கெடுவை விதிக்க முடியுமா மற்றும் பரிந்துரைக்க முடியுமா?

6. பிரிவு 201-இன் கீழ் ஜனாதிபதியால் அரசியலமைப்பு விருப்புரிமையைப் பயன்படுத்துவது மறுஆய்வுக்கு உட்பட்டதா?

7. பிரிவு 201-இன் கீழ் ஜனாதிபதியின் விருப்புரிமையைப் பயன்படுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவுகள் மூலம் காலக்கெடுவை விதிக்க முடியுமா?

8. கவர்னர் ஒரு மசோதாவை ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கும்போது, பிரிவு 143-இன் கீழ் சுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனையைப் பெற சுப்ரீம் கோர்ட்டின் கருத்தைப் பெற வேண்டுமா?

9. பிரிவு 200 மற்றும் 201 இன் கீழ் கவர்னர் மற்றும் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகள், அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, நீதித்துறையால் ஜனாதிபதியின் முடிவுகள் நியாயப்படுத்தப்படுமா?

10. பிரிவு 142 இன் மூலம் ஜனாதிபதி அல்லது கவர்னர் பயன்படுத்தும் அரசியலமைப்பு அதிகாரங்களை நீதித்துறை மாற்றியமைக்கவோ அல்லது மீறவோ முடியுமா?

11. பிரிவு 200 இன் கீழ் மாநில சட்டப்பேரவையால் இயற்றப்படும் மசோதா, கவர்னிரின் ஒப்புதல் இல்லாமல் சட்டமாகுமா?

12. சுப்ரீம் கோர்ட்டின் எந்த அமர்வும் முதலில் ஒரு வழக்கில் கணிசமான அரசியலமைப்பு விளக்கத்தை உள்ளடக்கியதா என்பதைத் தீர்மானித்து, பிரிவு 145(3) இன் கீழ் குறைந்தபட்சம் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு பரிந்துரைக்க வேண்டுமா?

13. பிரிவு 131-ன் கீழ் வழக்குத் தொடருவதைத் தவிர, வேறு எந்த வழியிலும் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு இடையிலான மோதல்களைத் தீர்ப்பதற்கு அரசியலமைப்பு சுப்ரீம் கோர்ட்டை அனுமதிக்கிறதா?

14. அரசியலமைப்பு அதிகாரங்கள் மற்றும் ஜனாதிபதியின், கவர்னரின் அதிகாரங்கள் பிரிவு 142-இன் கீழ் எந்த வகையிலும் மாற்ற முடியுமா?

மேற்கண்ட கேள்விகளை எழுப்புவதன் மூலம், ஜனாதிபதி நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரத்தின் அரசியலமைப்பு எல்லைகள் குறித்து தெளிவுபடுத்த முயற்சிக்கிறார்,

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் நீதித்துறை விளக்கத்தின் அவசியத்தை வலுப்படுத்துகிறது. மேலும், ஜனாதிபதி முர்மு தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி சுப்ரீம் கோர்ட்டிடம் இந்த கேள்விகளை எழுப்பியுள்ளார்.

மாநில மசோதாக்கள் குறித்து முடிவு எடுப்பதற்கு தனக்கு காலக்கெடு விதிக்க முடியாமா என 14 கேள்விகளை முன்வைத்து ஜனாதிபதி கூடுதல் விளக்கம் கேட்டிருந்த நிலையில், தலைமை நீதிபதி தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு இன்று அமைக்கப்பட உள்ளது.